ஓம் விநாயகநம

# சந்திரதீபம்

## சைவம் வளர்க்கும் தமிழ் பத்திரிகை

தருமத்தைக் காத்து தவத்தைப் பெருக்கி சிவத்தைப் பேணத் திருவருள் கொண்டது.

UNIVERSITY OF SRI LANKA JAFFNA CAMPUS
RECEIVED 1979-6-1
PERIODICALS DIVISION
LIBRARY

இதழ் 2 சித்தார்த்தி வருஷம் சித்திரைமாதம் 14ம் திகதி வெள்ளிக்கிழமை [27-4-1979] சுடர் 1

## முட்டும் முனிவுமிலாத அன்பின்வழிபாடே சைவத்தின் மூலப்பொருளாவது.

கீழே தரப்படும் தேவாரத்தை நோக்குவோமேயானால் அதில் நின்றும் எழுகின்ற கருத்தை மிக ஆழமுடன் நோக்கினால் அடியார்கட்கு வேண்டப்படுவது அன்பு அடுத்து எம்பிராற்குச் செய்யும் தொண்டான கடமை. இக்கடமையாது என தேவாரத்து மொழிகின்றபோது ஞானசம்பந்தர் முதற்கண் தொழுவார்க்கு கிரியை செய்வார்க்கு அன்பு பட்டமனமும் முட்டும் முனிவு மில்லாத மனமும் வேண்டு மென்கின்றார். மனம் தூய்மைப் பட்டாலன்றி செய்யும் தொழில் தூய்மை பெறாது. தூய்மையிலாது தொழிலைச் செய்து நற்பலன் அடையலாமோ? ஒருக்காலமும் அது முடியாது.

உலகுய்ய நடமாடும் ஒருத்தனாய கடவுள் சிவனுக்கு தொண்டு செய்வாரில் முட்டும் முனிவும் ஆகாது. முட்டு என்பது தாம் செய்யும் பணியில் இடைச்செருக்கல் புறச்செயல் நாட்டத்தால் தவறு நேர்தல் தம்பணியை தாம் இகழ்தல் அரை மனப்படுதல் இவையாகும். சிவதொண்டு செய்வாரிடத்து இவை ஒருபோதும் ஆகாது

முனிவு என்பதும் தம்பணியில் பூரண விசுவாசமின்மையால் வருவது. சோம்பலால் வருவது. தம்பணியை மதிப்பாரில்லையே எனும் கவலை மிகுதியால் வருவது. முனிவு எப்பொழுதும் அன்பிற்கு முரணுவது ஆதலின் முனிவை நீக்கல் நலம்.

கடவுள் உலகிற்கு ஒருவரே அவர் உலகம் யாவையும் ஆக்கிக் காத்து அழித்து விளையாடி நிற்கும் பொருள். அது பிறப்பது இறப்பது பெயர் செயல் யாவும் இல்லாதது என பெரியோர் கண்டு கொண்டனர்.

பிறந்தால் எதுவும் இறக்கும். இறந்தால் எதுவும் மீளப் பிறக்கும. அறிவு கொண்டு நான் என்னும் தன்மையுடைய எவையும் இறக்கும். ஆதலால் எம் இறைவனை குணங்கள் தாம் இல்லாது இன்பவடிவான பெரும் பொருள்எனக் கூறினர் எம் பெரியோர்.

உலகிற்கு பல வேறு கடவுள் இருக்க முடியாது. ஒரு கடவுள் தான் இருக்கமுடியும். பல வேறு கடவுள் உண்டு என்று போதிப்பது அறியாமையே. ஆனால் ஒரு பொருள் தான் உலக அருள் காரணமாகப் பல வேறு உருவம் கொண்டார் என்பது வேத நூற் துணிபு பல பல வேடமாகும் பரநாரிபாகன் பசு வேறும் எங்கள் பரமன் என்கின்றார்.

உண்மைப் பொருள் விளக்கத்தைத் தூய சிந்தையால் பெற முடியுமன்றி வேறு எதனாலும் பெற முடியாது திருஞானசம்பந்தப் பெருமான் அருளால் மிகுந்த கருணை உடையவராய் திருநல்லூர்ப் பெருமானை உலகுய்ய நடமாடுவானைப் போற்றுகின்ற திருப்பதிகம் ஒன்று கீழே தரப்படுகின்றது. ஓதி உணருங்கள். அப்பதிகத்து நல்ல கருத்துக்கள் தெரிவிக்கின்றார்

**கொட்டும் பறைசீராற் குழும அனலேந்தி
நட்டம் பயின்றாடும் நல்லூர்ப் பெருமானை
முட்டின் றிருபோது முனியா தெழுந்தன்பு
பட்ட மனத்தார்கள் அறியார் பாவமே.**

முழக்கப் பெறும் பறையின் சீருக் கமைந்திட குவிந்தெரியும் நெருப்பை திருக்கையில் ஏந்தி திருநடனம் பயின்று நித்தலும் ஆடியருளும் நல்லூரில் இருக்கும் பெருமானை; மனதில் முட்டு ஏதும் இன்றி காலை மாலை என்னும் இரு நேரமும் ஏதும் முனிவு கொள்ளாது தவறு நினையாது அன்புபட்ட மனத்தராய் வழிபடும் அடியார்கள் பாவம் என்பது அறியார்கள்.

முட்டும் முனிவும் இல்லாத வழிபாடு என்றும் பாவச்செயல் செய்ய வையாது. அத்தகைய நினைப்புக் கொள்ள வையாது என்றமை இங்கு கருத்தாக உள்ளது. அன்பு பட்டமனம் அடுத்தவர்க்கு தீங்கிழைக்கவோ அல்லாது பிறர் பொருளை அபகரிக்கவோ எண்ணாது. அன்புபட்டமனம் உடையார் பிறர்க்கு ஒருதீமை வருவிக்க நினையும் போது தன்னை அந்நிலையில் வைத்து சிந்தித்து கொள்வார். இப்படியான நிலை உடைய பெரியோர்களை இன்னமும் காணலாகும். அன்பு பட்ட மனத்தில் எக்காலமும் சுயநலம் தற்பெருமை குரோதம் பிரிவினை ஓரவாங்கியம் இவை இருக்கவே இராது. அன்பின் இயல்பு தருமத்தின் அடிப்படையன்றி எவர்க்கும் ஊற்றெடுக்காது. 1

**ஏறில் எருதேறும் எழிலா யிழையோடும்
வேறும் உடனுமாம் விகிர்த ரவரென்ன
நாறும் மலர்ப்பொய்கை நல்லூர்ப் பெருமானைக்
கூறும் அடியார்கட் கடையா குற்றமே.**

தனக்கு மேலான ஓர் தலைமை இலாத இடபத்தின் மேலாக ஏறியருளி அழகால் மிகுந்த உமையம்மையாருடன் வேறாகவும் ஒன்றாகவும் என்றும் உள்ள சர்வவல்லமை உடையவர் இவர் என்னும் படி வாசம் கமழும் தாமரை மலர்த் தடாகம் நிறைந்த நல்லூரில் அமர்ந்தருளும் பெருமானை தாம் விரும்பும் எப்பொருளிலும் மேலாகக் கூறுகின்ற அடியார்கட்கு குற்றம் அடையாது.

அடியார்கள் உலகில் பொன் பொருள் வீடு போகம் பெருமை இவையாவும் தமக்குவேண்டுமெனக்கருதாதவர். இத்தகைய பொருள்யாவினும் மேலாக சிவனையே காண்பார்கள். சிவன் அருளே பொருள் போகம் சிறப்பாக எண்ணும் அவர்க்கு இப்பொருளை வாஞ்சிப்பவரிடத்து எழுகின்ற குற்றங்கள் அடையாது என்பது உண்மையே. பொன் புகழ் பட்டம் பதவி இவற்றினால் உலகில் பிரபல்ய மடைய விரும்புவார்க்கு குரோதம் மானம் காமம் லோபம இவைமிகுவது இயல்பு. இவையாவும் நீக்கி சிவன் தான் இவை எல்லாம் எனக் கூறி நன்மை தீமை அற்று இருப்பார்கள் சிவனடியார். 2

**சூடும் இளந்திங்கள் சுடர்பொற் சடைதாழ
ஓடுண் கலனாக வூரு ரிடுபிச்சை
நாடுந் நெறியானை நல்லூர்ப் பெருமானைப்
பாடும் அடியார்கட் கடையா பாவமே.**

சூடப்படும் இளம்பிறை சூடிய ஒளி பரந்த சடைதாழ்ந்திட மண்டை ஓடுதாம் உண்ணும் பிச்சைச் சோறு உண்டிடும் பாத்திரமாக ஊரிலே இடுகின்ற பிச்சைச் சோற்றிற்கு விரும்பி வழிபடுகின்ற நெறியுடைய கடவுளை; நல்லூரில் இருக்கும் கடவுளைப் பாடும் அடியார்க்கு அடையாது பாவம்

பாடும் அடியார் என்றது பிறர் தம்பாடல் நயம் புலமையை வியக்கும்படி பிறர்க்காகப் பாடாது சிவனுக்காகக் தன்பாட்டில் பாடும் அடியார்க்கு பாவம் அடையாது. இந்நிலையை நம்மக்கள் தெளியவேண்டும். பொருளுக்காக இறைவனை பிறர்க்காகப் பாடுவார்க்கு பழியும் பாவமும் இயல்பில் சேரும். பொருளாகத்தம் தொண்டை மாற்றாது புனிதமாகமாற்றல் நன்று. 3

**நீத்த நெறியானை நீங்காத் தவத்தானை
நாத்த நெறியானை நல்லூர்ப் பெருமானைக்
காத்த நெறியானைக் கைகூப் பித்தொழு
தேத்தும் அடியார்கட் கில்லை இடர்தானே.**

எல்லா இன்பங்களையும் நீக்கிய நெறி உடைய கடவுளை நீங்காத தவத்தில் நிற்பானை தன் திருவடியே சேரும் வண்ணம் வகுத்த நெறிஉடையவனை, நல்லூரில் இருக்கும் பெருமானை உலகில் அருள் விளங்கக் காத்த நெறிஉடையவனை கைகள் கூப்பித் தொழுது ஏத்தும் அடியார்கட்கு இல்லை இடர்.

கடவுள் இயல்பு இங்கு கூறப்பட்டது. கடவுள் எல்லாப் போகங்களும் பற்றுக்களும் நீங்கியவர். நீங்காத தவமுடையவர். தன் தவநெறியை தாமே வகுத்தவர். அதனைத் தாமேகாப்பவர். இத்தகைய வள்ளலைக் கைகூப்பித் தொழுவார்க்கு இடர் எப்படி வரும்? வழிபடும் நாம் இறைவனுடைய அருட் பெருமையையும் சிந்தித்தல் நலம். 4

**ஆகத் துமைகேள்வன் அரவச் சடைதாழ
நாகம் அசைத்தானை நல்லூர்ப் பெருமானைத்
தாகம்புகுந்தண்மித்தாள்கள் தொழுந்தொண்டர்
போகம் மனத்தராய்ப் புகழத் திரிவாரே.**

தனது உடம்பின் ஒருபாகத்து உமையம்மையை வைத்து அவளுக்கு நாயகனாகி பாம்புஅணிந்த சடைதாழ நாகபாம்பினை அசைத்தானை; நல்லூர்ப் பெருமானை அடையும் தாகம் கொண்டு அணுகி திருவடி வணங்கும் அடியார்கள் போகம் நிறைந்த மனமுடையராய் உலகம் புகழும்படி திரிவார்கள்.

தாகம் புகுதல் என்றது எம்பிரானை நான் அடைவேன் என்ற இச்சை இயல்பில் கொள்ளுதல். தண்ணீர் விடாய் கொண்டாலன்றி தண்ணீர் விடாய் சுவைகாணல் அரிது. அதே போன்று சிவன் அருள் பெறுதற்கும் ஒருவர் தாகம் பெறல் வேண்டும். 5

**கொல்லுங் களியானை யுரிபோர்த் துமையஞ்ச
நல்ல நெறியானை நல்லூர்ப் பெருமானைச்
செல்லும் நெறியானைச் சேர்ந்தா ரிடர்தீரச்
சொல்லும் அடியார்கள் அறியார் துக்கமே.**

கொலை செய்யும் களிப்புடைய யானையின் தோலினைப் போர்த்து அச்செயல் கண்டு உமையம்மை நடுங்கிட வைத்த நல்லநெறி உடைய கடவுளை; நல்லூரில் இருக்கும் பெருமானை; நாம் ஒழுகும் நன்நெறியானவனை; தன்னை அண்டினார் அல்லது தன்குலத்தவர் தமக்கு நேரும்படியாக உள்ள இடர்திரச் சொல்லுகின்ற அடியார்கள் துக்கம் சேரார்கள். பிறர் தம் அறிவின்மையால் பெருகக் கூடிய இடரை நீக்கவகை சொல்லும் அடியார் துக்கம் சேரார் தானே!

**எங்கள் பெருமானை இமையோர் தொழுதேத்தும்
நங்கள் பெருமானை நல்லூர் பிரிவில்லாத்
தங்கை தலைக்கேற்றி யாளென் றடிநீழல்
தங்கும் மனத்தார்கள் தடுமாற் றறுப்பாரே.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்களது பெருமானை. தேவர்கள் தொழுது போற்றினும் நங்களது பெருமானை நல்லூரரைப் பிரிவில்லாது தனது கைகளைத் தலைமீது குவித்து எம்மை ஆண்டருள் என்று திருவடி நீழல் கீழாகத்தங்கி நிற்கும் மனமுடையவர் தம்சிந்தையில் எழும் தடுமாற்றம் அறுத்திடுவார்கள்.

சிவத்தியானத்தில் அமிழ்ந்தி நிற்பார்க்கு தடுமாற்றம் நீக்கிக் கொள்வார்கள். உச்சியில் கைகூப்பி தனதுள்ஞானஞன பேரொளியை நினைந்து எம்மை ஆள் என வேண்டுவார் தடுமாற்றம் அறுப்பார்கள். 7

## காமன்எழில்வாட்டிக்கடல்சூழ் இலங்கைக்கோன்
## நாமம் இறுத்தானை நல்லூர்ப் பெருமானை
## ஏம மனத்தராய் இகழா தெழுந்தொண்டர்
## தீப மனத்தார்கள் அறியார் தீயவே.

மன்மதனின் எழிலை அழித்து கடல் சூழ்ந்த இலங்கை அரசனின் பேர் கெடுத்தவனை நல்லூரில் இருக்கும் பெருமானை இன்பமுடைய மனம் கொண்டவராய் இகழாது வணங்கி எழுகின்ற தொண்டர்கள் தீபம் போலும் வெளிச்சமுடைய மனமுடையவராய் இருப்பார்கள். அவர்கள் தீயகருமம் அறியார்கள்.

வெளிச்சமான மனத்தை தொண்டு மூலமே பெறலாகும். வஞ்சகமற்று அன்புகூர்ந்த தொண்டினுல் பெறலாகும். நல்லூர்ப் பெருமானை வணங்கும் போது ஆநந்தமுற்ற மனமுடையராய் அமையுங்கள். சிந்தையில் கருகல் தன்மையின்றி பூரணமாகி நின்று வணங்குங்கள் என்கின்ருர். இன்பமுடைய சிந்தையில் கருகல் வராது. வஞ்சகமே நெஞ்சில் கருகலை ஏற்படுத்துவது. 8

## வண்ண மலரானும் வையம் அளந்தானும்
## நண்ண லரியானை நல்லூர்ப் பெருமானைத்
## தண்ண மலர் தூவித் தாள்கள் தொழுதேத்த
## எண்ணும் அடியார்கட் கில்லை யிடுக்கணே.

அழகிய வண்ண முடைய தாமரை ஆசனனுகிய கடவுள் பிரமனும் பூமியை அளந்த நாராயணனும் தேடி அடைய முடியாதவனை நல்லூரில் இருக்கும் பெருமானை குளிர்ந்த மலர் தூவித் திருவடிகள் தொழுது போற்ற எண்ணும் அடியார்கட்கு இடுக்கண் ஏதும் வராது.

இறைவனை அன்புடைய மனத்தாராய் பூச்சொரிந்து தொழுதிடஎண்ணுவார்க்கு இடுக்கண் இல்லை நல்லூரில் இருப்பவரே எங்கும் இருப்பவராதலின் எங்கிருந்தாலும் ஏத்துவார் ஒன்றே தொழுகின்ருராதலின் நல்லூர்ப் பெருமானை தண்ணமலர் தூவித் தாள்கள் தொழுதேத்த எண்ணும் அடியார் என்ருர். 9

## பிச்சக் குடைநீழற் சமணர் சாக்சியர்
## நிச்சம் அலர் தூற்ற நின்ற பெருமானை
## நச்சு மிடற்றனை நல்லூர்ப் பெருமானை
## எச்சும் அடியார்கட் கில்லை இடர்தானே.

பிச்சக்குடையின் நீழலில் வாழும் சமணர் சாக்கியர் இவர்கள் நித்தலும் இல்லாத பொய் மொழிகள் பல இகழ்ந்துரைப்ப நின்ற பெருமானை நஞ்சணிந்த கண்டமுடைய பெருமானை நல்லூரில் இருக்கும் கடவுளை விரும்பும் அடியார்கட்கு இடர் இல்லை.

வழிப்பறி கொள்ளை இயந்திர மிருத்து வாகன மிருத்து இனக்கலவரங்களில் துயருறுத்தல் இவைகள் நல்லூர் அமர்ந்த நாதனை தாம் பெறும் எப் பொருளிலும் மேலாக விரும்பு வார்க்கு வந்தடையாது. இத்தகைய இடரில் இவர் ஒருக்காலும் சிக்குணுது பாது காக்கப்படுவார். 10

## தண்ணம் புனற்காழி ஞான சம்பந்தன்
## நண்ணும் புனல்வேலி நல்லூர்ப் பெருமானை
## வண்ணம் புனைமாலை வைக லேத்துவார்
## விண்ணுந் நிலனுமாய் விளங்கும் புகழாரே.

11. குளிர்ந்த அழகிய நீருடைய சிகாழி வந்த ஞானசம்பந்தன் நீர் சூழ்ந்த வேலி போல் அமையும் நல்லூரில் இருக்கும் பெருமானை வண்ணங்களாகப் பாடிய பாமாலை இதனை நித்தலும் போற்றுவார்கள் வானமும் பூமியுமாக விளங்கிடும் புகழுடைய வராவார்கள்.

# நம்மைச் சேர்ந்தார் இடர்தீர சொல்லும் நாம் தீங்கும் துக்கமும் சேரோம்.

ஒருவரின் தவருன நடத்தை பற்றி எடுத்துக் காண்பித்தால் தவருன நடத்தையுடையார் ரோச மிகுதியால் தம்மில் குறை காண்பவரிடத்து கோபிப்பது இயல்பு. நான் எப்படி நடந்தாலும் இவருக்கென்ன. இவரேன் நம்மைக் குறை கூறுவான். தற்செயலாக நான் பிழை விட்டால் சொல்லிக் காட்டுவதோ? இதனல் என் உயர்விற்கு பங்கம் நேருதே அவமானமாகுதே என நினைப்பது இயல்பு. இந்த மனப்பாங்கு நம்நாட்டிடை எல்லா மக்களிலும் உள்ளது எனலாம். ஆரும் குறை சொன்னல் சரீரெனக் கோபம் வரும்.

இந்த நிலையால் ஒருவரின் குறைகளைக் காண்பிப்பார் பலகால நண்பராய் அல்லது உறவினராய் இருந்தாரிடத்தும் பகையாளராக மாற வேண்டி வரும். சிலவேளை குறை சொன்னவர்க்கு அக்குறை உடையவ ரால்அடிவாங்க வேண்டியும் வரும். இது இன்று புதிதானதல்ல. என்றுமே உள்ள காரியம்.

சில காலங்களில் வலி மிகுந்தவர் பிழை விட்டால் படை மிகுந்தவர் பிழை விட்டால் பிழையினை வலியிலார் காட்டப் போனல் அல்லது சொல்லப் போனுல் அவர்பாடு உயிர்க்கு மோசமான நிலையாகவும் முடியும். இதனலே வலி உடையார் படை உடையார் பிழை விடும் போது வலி இலார் அவர் பிழையைச் சொல்லப் பயந்தே பேசாதிருப்பர். இந்த நிலை தமிழ் பிரதேசங்களில் மிக மலிந்திருக்கக் காணலாம். சிலர் தமக்கு வேண்டியவர் பிழை விட்டால் அப்பிழையை பெரிதாக்காமல் அப்பிழைக்கு சரியும் கண்டு தம சினேகத்திற்கும் பங்கம் நேராதவாறு பாது காத்துக் கொள்வர்,

ஆனல் வள்ளுவர் சிநேகம் எதற்காக என்றுல் ஆளை யாள் கண்ட நேரம் புன்சிரிப்புடன் மகிழ்ந்து சில வேடிக்கை சொல்லிச் சிரிப்பதற்கல்ல! ஆனல் தன் சினேகிதன் தன் நடத்தையில் பிழை விடுகிறுர் இதனல் அவர் நன்மை பழுதடையப் போகுது என்பதை உணர்ந்து தன் சிநேகிதரிடம் கடுமையாகச் சொல்லி தன் நண்பனை அவர் விடும் பிழையில் நின்றும் பாதுகாத்து சிநேசிதனை நன்நெறிப் படுத்தவேண்டும் என்றதை "நகுதல்பொருட்டன்று கேண்மை மிகுதிக்கண்மேற்சென்று இடித்தற் பொருட்டு" என்கின்ருர். இந்த குறளினை அப்படியே உணர்ந்தால் சிநேகிதன் கடமை யாது என்பது நன்கு புலப்படும், தனது நண்பன் தன்னில் உள்ள குறையைக் காண்பிக்கும் போது குறை கொண்ட நண்பனின் கடமை என்ன? இவர் நம்மை குறை சொன்னவர் எனக் கோபிப்பது முறையோ அல்லது தன்னிடத்து அன்பினல் காட்டப் பட்ட குறையில் நின்றும் தாம் நீங்கி நடத்தல் முறையோ? சிந்தித்துப் பாருங்கள்

யோகசுவாமி சில காலங்களில் நம் தவறுகளை உணர்ந்து கொண்டு கண்டபாட்டில் ஏசும். ஏசி விட்டு நான் உன் சிநேகிதன் என நினை எனச் சொல்லும். சொல்லிவிட்டு வழியில் தெருவில் கண்ட சிநேகிதன் எனச் சொல்வார். நான் உன் குருவல்ல! குரு என்று நீ நினையாதே! உன் சிநேகிதன் தான் எனச் சொன்ஞர். சொல்லி விட்டு என்னை நோக்கி சிநேகிதன் என்ற சொல்விற்கு பொருள் யாது? சொல்பார்ப்போம் என்ருர். நான் பேசாது நின்றேன். எனக்கு சிநேகிதன் என்னும் சொல்லிற்கு அந்நேரம் பொருள் காண முடியவில்லை. சில நாட்கள் சென்ற பின் ஏதோ உபநிஷத் விளக்கம் பற்றிய நூல் ஒன்று பார்க்க நேர்ந்தது. அது யாதென ஞாபகமில்லை. அந்நூலில் "சிநேகிதன்" என்ற பதத்திற்கு ஒரேவழியில் நடப்பவன் என்பது கருத்தாகத் தெரிவிக்கப் பட்டிருந்தது. அப்பொழுது தான் வழியில் தெருவில் கண்ட சிநேதன் நான் என்ற சுவாமி சொன்ன வாக்கியத்திற்கும் பொருள் விளங்கியது. இந்த வழியில் யோகசுவாமி தெருவில் கண்ட சிநேகிதம் என்றதை நாம் ஆராய்வோம். உலகில் வழிகள் தெருக்கள் ஏன் உள்ளன? என எண்ணப்புகுந்தால் ஒவ்வொருவரும் தாம் செல்ல வேண்டிய இலக்கான ஊரை அடைவதற்கு அவை உளதாக உள்ளன. இந்தவழியால் தான் எல்லாரும் செல்வது முறை, ஓர் ஊரை அடைய செல்லும் போது வழியால் செல்வார் யாவரும் ஒருவர் ஒருவரில் நோக்கம் ஒன்றுக உடையரானமையால் வழியில் செல்லும் அவர் சிநேகிதர் என்றே சொல்லாம். கொழும்பு செல்வார் றெயிலில் சந்தித்தால் பின்னர் அவரும் சிநேகிதராகிருர். றெயிலில் கண்ட கிநேகிதம் நீண்ட சிநேகிதமாகவும் மாறுகிறது. ஆதலால் கிநேகிதன் என்றபதம் ஒரு கொள்கையில் ஒரு நோக்குடன் செல்வார் என்றதேயாகும். சிநேகிதன் என வழிப்போவாரை நாம் சொல்வது வழியில் ஒரு நோக்குடன் சேர்ந்து கொண்டவர் என்றதே யாகின்றது. எனவே இவரை சேர்ந்தார் எனவும் கூறலாம். இந்த மக்கள் கொழும்பிற்கு செல்லும் நேர் பாதையை விட்டு விலகின்றபோது பாதையை விலகு வாரை நோக்கி நீங்கள் பாதையைத் தவற விடுகின்றீர் என்று சொல்லவே வேண்டும். அப்படிச் சொல்லல் ஓர் தருமம், இதனை நன்கு உணர்து கொண்டு நம சைவநிலையையும் சிந்திப்போம், சிநேகிதரைச் சேர்ந்தார் எனவும் ஒரே வழியில் செல்வராதலின் நாம் சொல்லிக் கொள்ளலாம்.

சிவன் ஒருத்தனே தெய்வம் அவன் அணியும் திருநீறு அணிவார் நாம் எல்லாரும் சிநேகிதரே. நம்மில் வேற்றுமை எக்காலமும் வேண்டியதில்லை. வெறுப்பு வேண்டியதில்லை. பகை வேண்டியதில்லை. நாம் நட்புரிமையால் நடந்து கொள்ளும் போது நாம் சில செயலில் தவறு விடுகின்றபோது தவறுகளைக் காண்பார் மீது கோபித்தல் முறையாகுமோ?

உண்மைகள் இல்லாத தவற்றைக் காண்பிக்கபட்டால் அது வேதனை தருவதொன்றுகும். அதுவஞ்சனை ஆதலின் அதனை எதிர்க்கலாம். அதுவும் அன்பால் எதிர்க்கலாம். அடி பிடி முதலியவற்றில் இறங்கல் சைவ மக்கட்கு அழகல்ல. நிதியான முறையில் வஞ்சனையை எதிர்க்க வேண்டும். இல்லை என்று சொல்லவில்லை.

இதனை நல்நோக்காக எடுத்துக் கொண்டு திருஞானசம்பந்தப் பெருமானது முற்பக்துள்ள தேவாரக்தை நோக்கினுல் அதில் அவர் தம் திருப்பதிகத்தில் பல நன்மை சொல்லும் போது ஓரிடத்து சேர்ந்தார் இடர்தீரச் சொல்லும் அடியார்கள் சேரார் துக்கமே எனச் சொல்கின்ருர் இதனைச்சிறிது சிந்தித்தால் யாவராயினும் தம் இனத்தைச் சேர்ந்தார்களின் இடர்கள் சேராது நன்நெறிகளைச் சொல்லும் அடியார்கள் துக்கம் சேரார்கள் என்கின்ருர் இந்தவகை துக்கம் நேராமல் பாதுகாப்பதற்கு யாவர்க்கும் இடர்தீரச் சொல்லல் வேண்டும். இனிக்கப் பேசி அவரவர் பிழைகளை மனதில் சிந்தியாது போவார் துன்பமே சேர்வார் என்பது மேற்காட்டிய கூற்றின் எதிர் மறையாக நாம் கொள்ளலாம்,

இதனை இக்காலத்து நம் சைவமக்கள் சிந்தையில் கொள்ள வேண்டும், நாம் எல்லாக்கும் உபதேசம் செய்கிறோம். சமயப் பிரசாரம் செய்கிறோம். இது நன்குடன் நடைபெறுகிறது. ஆனல் நமதுமக்களுக்குற்ற இடர்கள் பெருகியே போகின்றன. இதனைச் சிந்திப்பவர் மிகமிகக் குறைவாகவே கணப்படுகிருர். யாரேனும் தத்தமக்குரிய செய்கைகளை நீதியாகவும் நிதானமாகவும் செய்கின்றனரோ எனின் இல்லவே. இல்லை.

ஓர் கோயிலை எடுத்துக் கொண்டால் அது வழிபாட்டிற்குரிய இடம். அங்கு நடைபெறுவன இடர்தீரச் செய்யும் தொண்டுகள். அங்கு திருவலகிடல் மெழுகுதல் பூமாலை கட்டல் வேதம் ஓதல் தூபமிடல் விளக்கேற்றுதல் பாடல் முதலியனவாகும், இதை நீக்கி வேறு செயல்களைச் செய்தால் நிச்சயம் பாவம் பெருகும். ஒலிபெருக்கி விண்ணனம் வேடிக்கை முதல் கேவலச் செயலை காவாலித்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னமான அடிபிடி சண்டை கற்பழிப்பு காமச் சேட்டை காமரசப் பாடல் இவையாவும் நடந்தால் அதனால் அங்கு சென்று வழிபடுவோர்க்கு உய்யும் நெறி எக்காலமுமே வராது. இது உண்மை. பொய் இல்லாத மெய்நெறியை உணர்வார் இதை விளங்குவர். ஆனால் பொய்யர் இவைகள் நடைபெற்றாலும் அவை இல்லை என மறுத்து பல பொய் இன்னமும் பேசுவார். கேட்டால் நேரடி பதில் கூறமுடியாது வேறு வேறு கதை சொல்வர். இவை இன்று நம் கோயிலில் நடவாதனவல்ல. இத்தகைய ஊழல்களில் பெரும் பங்கு கொள்வோர் பிராமணர் எஜமான்கள் சில திருப்பணிச் சபையில் உள்ள அங்கத்தவருமாகக் காணப்படுகிறார்.

பிறவியால் வருவன பல கேடுகள் உள. அவை யாவன கோபம் காமம் உயர்வு தாழ்வு இவைமுதல் பல. இவைபெருகப் பெருகபிறவியல் துயரமும் பெருகும். அது விளங்கப் படாமையாக இக்கேடுகள் விளைவன. ஒருவர்தான் என் செய்கின்றேன் என எண்ணாமல் கருமம் புரியும் போது அவர்க்கு உண்மையை எடுத்துக் காட்டல் ஓர் தருமம். அழுக்கற்ற சிந்தை உடையோர் இதைச் செய்திடும் பொழுது அச்செயல் தீங்குடையாரையும் தூய்மைப் படுத்தி அத்தொண்டு செய்வார்க்கும் ஆன்மா ஈடேற்றம் தரும் என உபநிஷங்கள் தெளிவு படுத்துவன. ஆதலால் சேர்ந்தார் இடர்தீரச் சொல்வார் துக்கம் சேரார்.

அடுத்து துக்கம் என்றால் யாது? இன்பம் என்றால் யாது? எனக்கு பிரயனம் செய்ய அழகிய கார் இல்லை. அடுத்த வீட்டார் பெரியகார் வைத்திருக்கிறார்! இங்கிலாந்தில் பிள்ளைகள் இப்பொழுது புதிய காரும் கொண்டு வந்தது. எல்லாரும் சிறப்புடன் ஒய்யாரமாக ஓடுகிறார். அவர் மனவியிடம் விதம் விதமான சேலை குமர் பெண்கள் இப்பொழுது மிகக் கூடுதலான துணியில் கால்சட்டை போடுது. பிள்ளைகளுக்கு கடைக்குப் போய்வர சயிக்கில். தூர இடம் போக ஸ்கூட்டர். வீட்டில் ஒரு றேடியோ. காரில் கோபிலில் ஒன்று. தங்கள் நாய் பூனை கோழி குரல் ரேப்பண்ணி இன்பமுடன் களித்திட ரேப்றைகோடர். உபசரிப்பு விருந்து முறை வீடு மாளிகை எல்லாம் மிகு திறம்! உத்தியோகம் அதன் உயர்வு மிகு இலகு இது எல்லாம் உண்டு எமக்கு அவர் காரில் பின் டிக்கியிலாதல் ஏறிப் போகத் தகுதியில்லை. நமக்கேன் இவையில்லை என வருந்துவது ஒரு துக்கம் எனலாம். என் பிள்ளைகள் படிப்பில்லை மற்றவர் படித்து விட்டார் அவர் சிறப்பு நமக்கில்லை, என வருந்துவது ஒரு துக்கம், ஐயற்றை பெண்பிள்ளை சயிக்கில் ஓடுது அம்மா நேரமொரு விதத்தில் றெசின்கவுணுடன் வீட்டு வாசலில் முன்னால் நிற்கிறா! சாதாரண ஓசையில் பாடும் றேடியோ வை ஆட்கள் வரக்கண்டால் உரக்கக் கதறப் போடுகிறா கோயில் மடப்பள்ளியில் றேடியோக்கள் சிறந்த பாட்டுப் பாட ஐயர்மார் பையிலாப் போடும் செய்திகளை ஓர் அந்தணர் மிகு விமரிசையாகச் சொல்லிச் சிரிச்சார். இப்படியான இன்பநிலையை இன்பமே எனக்கருதி எமக்கு இவை இல்லையே என துக்கிப்பதும் ஓர் துக்கம் தான்! அப்பொழுது இந்த இன்பம் துக்கமாகவும் மாறாதோ என்பது கேள்வி? இதற்கு வாசகரே தெரிந்த அளவில் விடைகாணுங்கள்.

துக்கம் என்பது இவை இல்லாமையால் எழுந்த கவலையோ? இவை வந்த போது கவலை தீருதோ இல்லை பெருகுகின்றதே! கவலை நோய் பிணி மூப்பு சாக்காடு இவற்றை போகங்களாய முன்னைய இன்பத்துறைகள் இல்லாமல் செய்கின்றனவோ எனின் இல்லை. இந்த வகை போகங்களால் முடிவில் பெரும் துக்கம் அடைவார் உண்டு. ஆதலின் இன்பம்யாது என்றால் பிணி மூப்பு சாக்காடு என்னும் இவற்றால் பாதிக்கப்படாத உண்மை நிலையே இன்பம்.

இதனை மாணிக்கவாசகர் துன்பமே பிறப்பே இறப்பொடு மயக்காம் தொடக்கலாம் அறுத்த நற்சோதி இன்பமே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன் என்கின்றார். இத்தகைய இன்பம் இறவா 'இன்பம் பேரின்பம் எனச் சொல்லப் பெறுவது. இவற்றிற்கு காரணமாகியவரே கடவுள். அதனை எட்டிக் கொண்டார்க்கு உணர்வார்க்கு துக்கம் வருமோ வராது.

இந்த இறவாத இன்ப நிலை பற்றி சகண்டோக்கிய உபநிஷத்தில் சிறந்த ஒருகதை வருகிறது. அதில் வேத நெறிப்படி வாழ்ந்தும் உண்மைப் பொருளை உணர விரும்பிய அந்தணர் முடிவின்இன்பநிலைஉபதேசம் பெறும் படியாக அக்காலத் திருந்த ஓர் அரசனிடம் சென்றனர்.

அந்த அரசன் வந்தவரை வரவேற்று உபசரித்து சொல்வான் ''ஐயன் மீர் எனது அரசாட்சிக்குட்பட்ட நாட்டில் கள்ளரில்லை. பிச்சைக்காரரிலை. குடிகாறர் இல்லை. தனது இல்லத்து அக்கினி காரியம் வழிபாடு செய்யாத அந்தணர் இல்லை. அறிவிலாத பேதை மக்கள் இல்லை. குதர்க்கம் பேசுவோன் இல்லை. வியபிசாரி இல்லை. வீண் கதை கதைத்து பொழுது போக்குபவன் இல்லை. இங்கு எல்லோரும் சுபிட்சமாக வாழ்கின்றனர். நீங்கள் அந்தணர்கள் என் விருந்தாளிகள். இங்குள்ள அந்தணர்க்கு கொடுப்பது போன்று உங்கட்கும் தருவேன் வேண்டியது கேளுங்கள்'' என்றான் அந்த அரசன். அப்பொழுது அந்தணர்கள் அரசனை நோக்கி ''பிரம்ம உணர்வின் தூய சிந்தையால் பொய் இலாத மெய்நெறியைக் கடைப்பிடித்திடும உன் அரசாட்சியில் தீங்கும் துயரமும் நேரவுமாமோ? அது வரார்து. அஃதிருப்ப நாம் உன்னிடம் பிரமத்தின் உண்மை நிலை பற்றி உபதேசம் பெற வந்தோம் எனக் கூறி அதனையே உபதேசிக்கும் படி வேண்டினராம். அரசன் அதற்கு இணங்கி மறு நாள் வரும்படி கூறி அன்று வந்த அவர்க்கு பிரம்ம உபதேசம் செய்தனன் என அந்த உபநிஷத்தில் கூறப்பெறுகிறது.

இந்த இன்ப நிலையை தொண்டு மூலம் தான் அடையலாம் என்பர் பெரியோர் வேறு வகை இல்லை. சம்பந்தப் பெருமான் முன்தந்த பாடலில் தாகம் புகுந்து அண்மி தாள்கள் தொழும் தொண்டர் என்கின்றார். தாகம் புகுதல் என்பது கடவுளை அடைவேன் அடைய வேண்டும் என அவாக் கொள்ளலாகும்! அதற்காக ஏனைய இச்சைகளை நீக்கிடுதல் வேண்டும். அப்போது தான் கடவுளை அடையும் தாகம் வரும். அடுத்து அண்மி என்றதால் அண்மி என்றது நெருங்குதல் என்றதாகும். உருவம் தோற்றம் இலாத பெருமானை காண்டற்கரிய கடவுளை எப்படி நெருங்குவது. தெரியாததை எப்படித் தெரிந்து சேர்வது என்பதற்காகத் தொண்டு செய்வதால் இறைவனை நாடியறிதல் என்பதாகும். அதனாலே தான் தொண்டு என்பது அவா நீங்கிய தூய வழிபாடு என்றும் அதன் எதிர்மறையாக மிண்டு எ பது புகழ் பட்டம் பதவி பொருள் வாங்குதல் என்னும் கருத்துப் பட வந்தது.

இதனாலே மிண்டு மனத்தவர் போமின்கள் மெய்யடியார்கள் வம்மின் எனக் கொள்ளப்பட்டது. மிண்டு மனத்தவரை மேல் நிலைக்கு கொண்டு வரச் செய்தலே கோயிலாக இருப்ப அதனிடம் ஒலிபெருக்கி சினிமா பாடல் பட்டம் பிரசங்கம் இவற்றை வைத்து கோயிலின் மேல் பழு தாக்குவது எவ்வளவு பாதகம்.

இதனை நன்கு நாம் தெளிவு கொள்ளின் உயர்ந்த நெறி நின்றால் தான் உலகை உய்விக்க முடியும். உயர்ந்த கருத்துடைய பிரம்ம ஞானமுடைய பெருமக்கள் வாழும்நாட்டில் பகை அச்சம் வறுமை பிணி இவை தாக்காது அகன்று போம். இவையாவற்றையும் நன்கு தெளிந்தால் மனிதனிடத்துள்ள பிரம ஞானத்தைக் கெடுப்பது அவன் கொள்ளும் ஆசை பொய் பொருள் வாஞ்சை காடைத்தனம் இவைபோன்ற பல. ஆதலினால் இத்தகைய பாதகங்களை நீவிர் கோவிலில் செய்யாதீர் என்று நீங்கள் இதனால் பெறக்கூடிய நன்மை கருதிச் சொன்னேனே அல்லாது எனக்கு எல்லாம் தெரியும் என சாமர்த்தியத்தைக் காண்பிக்கச் சொன்னேனே தயவு செய்து நம்மீது ஏதும் குறைவிளங்காமல் நீங்கள் இதைத் தெளியுங்கள்.

இதனைத்தான் சேர்ந்தார் இடர் தீரச் சொல்லும் அடியார்கள் சேரார் துக்கமே என சம்பந்தப் பெருமான் முதற் பக்கத்து தந்த தேவாரத்து மொழிகின்றமையைக் காணுங்கள்.

# சந்திரதீபம் பெரிய அன்பருக்கு உரியதாய் கோவிலை புனிதமாக்குவது.

மாணிக்கவாசகர் திருப்பெருந்துறையில் உண்மை உபதேசம் பெற்றார். பெற்ற பின்பு தான் இது காறும் ஒழுகி வந்த நெறிகளுக்கும் இப்போது உண்மை தெளிந்த பின் பெற்ற நினைவுகட்கும் எவ்வளவோ வித்தியாசம் காணப் பெற்றது. அதனாலே உடன் தமது பாடல் ஒன்றில் நெறி அல்லா நெறி தன்னை நெறியாக நினைவேனை எனச் சொல்கின்றார். இதனுடன் தாம் உபதேச மூலம் உண்மை உணர்வுபெற்ற பின்னர் தாம் கொண்ட நல்உணர்வின் பயனால் அத்தினத்து முன்பான காலம் வரையும் தாம் கூடித்திரிந்த; உறவு கொண்டிருந்த; நட்புக் கொண்டிருந்த; மக்கள் கூட்டத்தை நினைக்கிறார். அவர்கள் அந்தணராக அரசராக பிரமுகராக அரசியல் தந்திரியாக மந்திரிகளாக சேனாதிபதிகளாக பலராக இருந்திருப்பார். ஏனெனில் பிரதம மந்திரியாக இருந்த அவர்க்கு இத்தகைய பெருமக்களின் இணைவு சகவாசம் ஏற்பட்டிருக்கும். அதோடு பல்வேறு சமயவாதிகளை சந்தித்து பழகி இருக்கவும் முடியும். இப்படியான ஓர் சூழ் நிலையில் அவர்களுடன் பழகிக் கொண்ட அவர் அவர்களது நடத்தை குணம் நோக்கம் அத்தனையும் உணர்ந்தே இருப்பார். ஆனால் உண்மை உணர்ந்த இன்று முன் காலத்தையும் இன்றுள்ள நிலையையும் ஒப்பு நோக்கிய பின் முற்காலத்து வாழ்வு முழுவதும் முத்தி நெறி அறியாத மூர்க்கர் கூட்டத்தின் இணக்கமாகவே முடிந்தது என்பதை தம்பாடல் ஒன்றில் முத்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனை பத்திநெறி அறிவித்து அப்பத்தி நெறி ஒன்றினால் தன் பழவினைகள் பாறிப் போகும் வண்ணம் சிவன் அருள் புரிந்தான் என்கின்றார்.

இவர் சொல்லும் பத்திநெறியைத் தான் எம்பிரான் திருஞானசம்பந்தர் பத்திமலர் என வலி உறுத்தியும் திருநாவுக்கரசர் பிரான் பத்திமையால் பணிந்து அடியேன் தன்னை பாமாலை பாடப்பயில் வித்தான் சிவன் என்றும் பத்திமையும் அடிமையையும் கைவிடுவான் பாவியேன் என்று சுந்தரர் பெருமானும் கூறியருள்கின்றனர். ஆகவே இந்த பத்தி நெறி தான் முக்கியம். பத்திநெறியில் மூர்க்கமோ வஞ்சனையோ கபடமோ துர்நடத்தையோ கீழ்மையான செயலோ இருக்காது. ஆதலினால் இந்த உண்மையை உபதேசமூலம் உணரப் பெற்ற பின் தன் உயர்வும் தக்கார் யார் தகவிலார் யார் என்பதும் புலப்பட முன்புள்ள சேர்க்கையை வெறுத்துத் தள்ளிட வேண்டி வந்தது. ஆதலின் அவர் தம் பாடலிலே இதை வெளிப்படையாகக் கூறுகின்றார். இறைவனை நோக்கி இறைவா இன்று உன்னை உணர்ந்தேன். இன்று உன்னை கண் குளிரக் கண்டேன். இனி நான் சாவேன் பிறவேன். அஃதிருப்ப நீ வித்து இல்லாமலே விளைவு செய்ய வல்லவன் என்பதை உணர்ரதேன். உலகத்தை நீயே வைத்தாய் இவையன்றி வானம் முழுவதும் உள்ள பொருள் யாவையும் வைத்தாய். பின்னர் நீ அதனை நீக்குவாய். ஆனால் நானே வஞ்சகம் நிறைந்த கள்வன். இந்த நிலையில் தான் பிரதமமந்திரியாக இருந்த காலத்துற்ற இருள் நிலையையும் இன்று பெற்ற ஒளி நிலையையும் ஒப்பு நோக்கும்போது தான் வஞ்சகக் கள்வன் என்றதும் தெளிவாகிட எத்தனை வஞ்சனை எத்தனைபொய் எத்தனை களவு தான் செய்திருப்பேன் என்பது புலனாகியது. ஆதலின் வஞ்சகள்வனேனை நின் கோயில் வாயிலில் உன்பால் இன்று தொட்டு உண்மை அன்பனாக மாறும் வகை ஓர் உணர்வுத்தாகம் ஆக்கினாய். அதன் தன்மையான பித்தனாக்கினாய். இந்த வகையால் என்னை பெரிய அன்பருக்கு உரியன் ஆக்கினாய். இவை யாவும் உனது அருள் அதை உணர்ந்தேன். ஆனால் ஒன்று மட்டும் சொல்கிறேன் பெரிய அன்பருக்கு உரியனாக்கிய என்னை சிறிய கொள்கைஉடைய உலகம் வெறுக்குது. கொலை செய்யவும் எத்தனிக்கின்றது. அடிக்க முறிக்க ஆத்திரம் கொள்ளுது. இந்த அறியாமை மிகுந்த மக்கள் கூட்டம் கோவிலில் செய்யும் பாதகங்களை அடிவர் வேடத்தில் செய்யும் பாதகங்களை பிராமணனாக சந்நியாசியாக இசையாளராக அலைவரும் தத்தம் குறுகிய மனப்பாங்கில் கோயிலில் பிற இடங்களில் செய்யும் பழி சூழும் பாவப்பெருக்கத்தை நோக்கினால் இவையால் நாம் வாழும் நாட்டின் சைவநெறிக்கு பங்கம் ஏற்படும் என்னும் கருத்தால் கண்டித்தும் சொல்ல வேண்டி வருகிறது. இவர்களது கிரியை முறைகளிலோ சமயக் கொள்கையிலோ ஏதும் பிரயோசனமில்லை என்றே சொல்லிட என்னை துன்புறுத்தப் பார்க்கிறார் பாதகர். ஆனால் நான் உன்னால் உண்மை உணர்த்தப் பெற்று வளர்க்ப்பெற்றவன். என்னை உலகம் துயருறுத்திக் கொலை செய்ய நீ விடாதே என்பதை தாம் வளர்த்த ஒரு நஞ்சு பழுக்கும் மாமரம் என்றாலும் வெட்டி எறிய மாட்டார். நானும் அவ்வண்ணம் தான் என்னை உடைய கடவுளே என்கின்றார்.

இந்த நிலையை நாம் உணரப் போனால் தாம் வளர்த்த நச்சு மாமரம் நற்பயன் தராவிட்டாலும் அதனையும் கொல்லல் தருமமாகாது. நஞ்சை அமுதாக்கும் வித்தை உன்கைவசம் இருக்கும் பொழுது என்னை ஏன் கொல்வான் எனவே கேட்கின்றார். இவருடைய பாடலில் திருப்படை எழுச்சி முதலியவற்றை நோக்கினால் அப்படியே அது ஓர் புதிய கருத்தை ஊக்கத்தை நமக்கு உணர்விக்கின்றது. உதாரணமாக தொண்டர்களே தூசிப்படையாக (தாக்கும் படை) முன் செல்லுங்கள் பத்தர்களே அவரைச் சூழப் போங்கள் [தாக்கும் படையை உறுதியாக்கும் படி) வலிமையின் திறலுடைய யோகிகளே இத்தகைய பெரும் அணிகளை (டிவிசன்) நீங்கள் தலைமை தாங்கிச் செலுத்துங்கள் (கப்ரின்) திண்மை குன்றாத சித்தர்களே நீங்கள் சேனைகளை வழி காட்டி பின்னாகச் செல்லுங்கள். (கொம் மாண்டர் இன் சீவ்) நாங்கள் இந்த பூமியை தேவ உலகமாக்குவோம். இங்கு அல்லல் தரும் பிறரது படைகள் தாக்காது இருப்பதற்கு என்கின்றார். இதனையும் கருத்தில் நாம் கொள்வோம் விளங்குவோம். இந்த விளக்கத்தால் நமக்கு அல்லலே வராது. அது துணிவு.

இப்படியாக மணிவாசகப் பெருமான் இதைஏன் சொன்னார்? சொல்ல வேண்டிய காரணம் என்ன? இறைவனைப் பாடிப் போக வேண்டிய இவர் இத்தகைய பாடலையும் ஏன் சொன்னார்? என்பது கேள்வி. தொண்டர் படை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

எழுச்சியை சொல்லும் போது ஞானவாள் ஏந்திய எம்பெருமானது நாத மான பறையை அடியுங்கள். இடபமேல் ஏறும் பெருமானது சிந்தை என்னும் வெண்குடை பிடியுங்கள். உங்களுக்கு கவசமாக திருநீற்றை நிறையப்பூசு மின்கள் இவ்வளவும் செய்தால் நீங்கள் வான நாட்டை இவ்வுலகில் வருவிக்க எழும்படைஞராகின்றீர் என்கின்றூர். சிவநாமம் ஓதல் சிவத்தியானம் செய்தல் திருநீறு நிறையப் பூசல் இவை உங்கள் போர் அணியாக ஞானம் என்னும் வாழ் உம் கையின் படையாக அமையட்டும்

இவர்களுடைய நிலையை நாம் நன்கு உணருவேமே யானுல் உண்மையில் இன்று கோவில் என் செய்கிறேம்.! தயவு செய்து தூய உள்ளத்தில் எழும் நீதியின் கருத்தைக் கொண்டு எப்படி நடந்திட வேண்டியநாம் எப்படி நடக்கின்றேம் என்பதைச் சிந்தித்துப் பாருங்கள். நீங்கள் கோவில் சென்று என்ன பார்த்தீர்? என்னகேட்டீர்? உங்களுக்கு அங்கு அர்ச்சிப்பார் பாடுவோர் பிரசங்கம் செய்வோர் யாவரும் எப்படி நடக்கிறூர். அவரிடத்து அவரை நீர் கனம் பண்ணக் கூடிய ஒழுக்கம் இருக்கிறதா? இவர்கள் யாவரும் பெரிய அன்பரா? கோவில் சந்நிதி முன்பு நின்று இன்று காணப்பெறும் கணிப்புடைய சமயபிரசாரகர் அந்தணரை பெரிய அன்பர் என்று மனம் கோணல் இன்றித் துணிந்து சொல்ல முடியுமா? ஆகவே மாணிக்க வாசகர் பெரிய அன்பருக்கு தன்னை உரியன் ஆக்கிஞய் என்ற போது தூய்மையின் நிறைவுடைய அன்பர் எனலாம். இவர் உலகில் பொருள் புகழ் போகம் முதல் வாஞ்சை இல்லாத மக்கள் தம்மை நன்கு உணர்ந்து தம்தகவிற்கேற்க நடந்திடும் மக்கள். இவர் தான் பெரிய அன்பராவர். சுருங்கச் சொன்ஞல் தன் சுகவாழ்வை இறைவன் அருள் உணர அர்ப்பணித்து நிற்பவரெனலாம்.

இதன் வழியே தான் சந்திரதீபம் தன் பணியைச் செய்கிறது. பொய் வாழ்வுடைய பிரசாரகரை ஒழுக்கமிலாத கேடு பிடித்த பிராமணரை தூய நடத்தையிலாது கௌரவத்திற்கும் விளம்பரத்திற்கும் பொருள் கொடுக்கும் வியாபாரிகளை சந்திரதீபம் போற்றிப் புகழ்ந்து தன் மெய் கெட்டு தாமும் பொய்யாகி அலையாமல் உண்மை வழி அறத்தினை உணர்ந்து உண்மை ஒழுக்க முடையராகி விளங்கும் பிராமண உத்தமரை அடியார்களைப் போற்றிப் பணிசெய்கிறது! பேதைதனக்குரிய காவாலித்தனம் சண்டித்தனத்தில் இறங்கும்! பெரியவர் ஒருபோதும் அதில் இல்லை. ஒருவர் தவறு விட்டால் அடிபிடிக்குப் போகார். அத்தவற்றை ஏற்கும் முறையில் எடுத்துக் காண்பிப்பார்.

ஆகையால் சந்திரதீபம் இன் நிலையில் தன்னை அன்புருவாக மாற்றி சிவன் அருளைத் தெளியும் அத்தனை பெருமக்கட்கும் தக்க பணி புரிகிறது இலங்கை இந்தியா என்னும் இரு தமிழ் பிரதேசங்கட்கும் தலையான ஓர் சமயப் பத்திரிகையாகும்! இப்படியாக அறந்தலை நின்ற பெருமக்கள் பலர் கருது கின்றனர்.

எமது யாழ்பாணத்தில் குற்றம் பல புரியும் பேதைப் பிராமணரும் ரடைத்தனம் வளர்க்கும் பிரசாரகரும் எஜயமானரும் சிலசதித் திட்டம் கபாடுகிறூர் எனச் செய்திகள் எட்டின. காரில் தெருவால் போகும் போது எேன்னைக் கண்டால் வைது கொண்டு போவதும் என்னைக் கொலை செய்வோம் எனப் பயமுறுத்தலையும் கேட்டு ஓர் இரவு முழுவதும் வேதனைப் பட்ட எனக்கு அன்று விடியற்காலை எழுந்து எம்பிரான் பணிபுரியத் தொடங்கும்வேளைலிச்சதின்றியே எனத் தொடங்கும் திருவாசகப் பாடலை நினைவு படுத்தி பெரிய அன்பருக்கு உரியஞக்கிஞய் என்று என் உடலம் சிலிர்க்க திருவருள் உணர்த்தியது. ஆதலின் இக்கருத்தை வாசகர் பலர்க்கும் நினைவு படுத்துகிறேன். சந்திரதீபம் தமிழ் பேசும் மக்கள் உய்தி அடைய திருவருளால் எழுந்த பத்திரிகை என்பதை அனைவரும் உணர்க! காடைப் பிராமணிக்கும் பெண்ணைத் தலைமை வைத்த பேதைகட்கும் பயமில்லை.

# வேதாந்த நெறிகளை சித்தாந்தத்தில் புகுத்திஞல் இரண்டும் கெடும்.

வேதாந்தம் என்றுல் பிரம்ம தியானவழி. அவ்வழியில் தானே பிரம்ம சொரூபமாக இருந்திடும் நிலை. இவர்கள் பூரண துறவிகள். இவர்கள் தமது தூயதுறவின் நிலையால் தம்வாழ்வில் புண்ணிய பாவ நிலையும் உணராத தூய துறவாகும். அவர்கள் தன்னிடத்து யாதும் தனதென்ற நிலை இலாத மிக மேலான நிலைஉடையவர். இவர்கட்கு கிரியைகள் யாதுமில்லை. இவர்கள் தனக்குள்ளும் தாஞன சிவத்தில் வயப்படுகின்றவர். அவர்களது உணவு பிச்சை அந்த உணவில் தீயது நல்லது என்றே எண்ணுதவர். இவர்களது புனித நிலை பற்றி நாம் சொல்ல முடியாது!

இச என்னும் உபநிஷத்தில் வேதாந்த நெறியில் ஓதப்பட வேண்டிய மந்திரங்களை கிரியைகளில் அநுமதிக்கக் கூடாது எனச் சொல்லப்படுகிறது. இதனை நன்கு தெளிந்தால் சித்தாந்தநெறிப்படி ஒழுகுவார்க்கு பின்னர் வேதாந்த நெறியின் இடைச் செருகல் ஆகாது. வேதாந்த நெறியில் புண்ணிய பாவங்களை வேறுக நோக்கிடும் நிலை இல்லையாயினும் அந்நெறியின் தூய ஒழுக்கம் மிகமிகக் கூர்மையானது. ஓர் வாள் நுனியில் நடப்பது போன்ற தன்மையாவது. வேதாந்த நெறியில் தவறு நேரின் பின்னர் அவர் உய்ய முடியாது! ஆனுல் சித்தாந்தம் பாவத்தை அறவே நீக்கி புண்ணியத்தை அடிப்படையாகக் கொண்டது. சித்தாந்தநெறி பதியை அடைவதற்கு பசுவான உயிர் முயல்வது என்பதாகும், இதனை நாம் கூர்ந்து விளங்குவோமேயானுல் நமது எந்த ஒரு கிரியையிலும் புண்ணிய ஆவாகனம் என்ற முதற்கிரியை உண்டு. அதன் நோக்கம் நாம் செய்யும் தொழிலில் புண்ணியத்தை வருவித்து புனிதத்தை ஏற்படுத்துவது என்றதாகும்.

சித்தாந்த நெறியில் எந்த ஒருகிரியையிலும் புனிதம் இல்லையேல் பின்னர் அக்கிரியையால் பலன் இல்லை. இதை நாம் நன்கு தெளிய வேண்டும். இதற்காகத்தான் எமது கோயில் கிரியைகளில் புனிதம் நிறைந்திட முதற்கண் அதற்கு இடைஞ்சலான ஒலிபெருக்கி வாஞெலி முதல் முட்டுவருவிக்கும் பொருள்களைத் தவிருங்கள் என நாம் சொல்வது,

ஒருவர் கிரியை செய்யும் போது மனதில் அழுக்கு இருக்கக் கூடாது. மனதில் அழுக்கு என்பது யாது? அதுதான் தனதுசெயலை பிறர் மதிக்க வேண்டும் என்பதே பெரும் அழுக்காகும். பிறர்மதிப்பதற்காக நாம் செயல் செய்வதைத் தவிர வேண்டும். கிரியைகள் செய்யும் போது பிறர் மதிப்பையோ இகழ்ச்சியையோ நாம் பொருட் படுத்திஞல் கிரியைகள் புனிதம் பெருது, இந்த எண்ணம் முட்டேயாகும். பிராமண சமுதாயம் இந்த ஒரு நிலையில் நீண்ட காலமான ஒருபழுதை தம்பால் பெருக்கிக் கொண்டது. கிரியைகள் இறைவனுக்குச் செய்வதன்றி புகழ்கீர்த்தி பெறச் செய்வதல்ல.

சைவசித்தாந்த நெறிப்படி ஒழுகுபவர் ஆதி சைவப் பிராமணர்கள். இவர்கள் முழுமுதற் கடவுளாய சிவனை அன்றி வேறு தெய்வம் எண்ணுதவர் இவர்கள் யாருக்குமே அடிமை இல்லை. இவர்களதுநெறி வாதுள ஆகம தந்திர விதிப்படி உளது. இவர்கள் புன்மையான எச்செயலையும் விரும்பாதவர்கள். அறவாழி அந்தணஞய் அநாதிமலபந்தம் நீங்கிய சித்துருவான சிவனை முதல்வராக் கொண்டு அந்த அநாதியாய பெருமான் வைத்த நெறி வழுவாது ஒழுகும் பேறுடையவர் அன்னுரின் பெருமை எம்மால் இங்கு விரித்தோத முடியாது.

இவர்கள் பெருமையை திருஞானசம்பந்தப் பெருமான் தமது தேவாரப் பதிகத்து நன்கு விரித்து ஓதி இருக்கின்றூர். அங்கமும் வேதமும் ஓதுநாவர் அந்தணர்நாளும் அடிபரவ என்றும் நெய்; தவழும் மூன்று அக்கினி தமக்குகாவலாக வளர்க்கும் நேர்மைபுரி நூல் அணிந்த அந்தணாளர் என்றும்; தோலோடு நூல்இழைசேர்ந்த மார்பர் என்றும் நாமருவிய கேள்வியில் வல்லவர் வேள்விகள் குன்றுதவர் என்றும் அந்தமும் ஆதியும் நான் முகனும் அரவணையானும் அறிவரிய மந்திர வேதங்கள் ஓது நாவர் என்றும் மகிழ்ந்து உள்கித் தொத்து உலாவிய நூல் அணிமார்பினர் என்றும்; சமயம் ஆறு அங்கம் வேதம் தரித்தார் என்றும் அங்கம் ஆறுேடும் அருமறைகள் தாங்கிஞர் என்றும் நான் மறை யோடு ஆறு அங்கம் பல கலைகள் தாங்கிஞர் என்றும பல வாறுகப் புகழ்ந்துள்ளார் இதனை நன்கு தெளிந்தால் ஓர் அந்தணர் இவ்வுலகில் பெறும் பேறும் பெருமையும் அளப்பரியது.

ஆனுல் இத்தகைய அந்தணரின் இயல்பு புண்ணியத்தின் அடிப்படையாக உள்ளது. இவர் வாழ்வின் பயன் புண்ணியமாக உள்ளது. பெரியபுராணத்தைப் படிப்பிக்கும் பொழுது இத்தகைய அந்தணர் பெருமக்களை என் மனதில் தியானிப்பேன். அதிகாலையில் எழுந்து அச்சு ஒப்பு நோக்குவேன், அப்பொழுது எம் பெருமான் பணிக்கென நிறுவிய சிறுகுடிசையில் இருந்து இவர் பற்றிச் சிந்திக்கும்போது தெய்வீகமயமாக இருக்கும். அந்தோ இத்தகைய அந்தணர் பெருமக்களை என்று எப் பிறவியில் எந்தயுகத்தில் நாம் காணலாகும். இத்தகைய பெரியோரை காணில் அவர் காலடியில் அப்படியே வீழ்ந்து வணங்கலாமே! அவர்களது வணக்கத்தால் ஆசியால் எம் குடிசைகள் சிறக்குமே! மாடங்களாக மலருமே!

இவரை விடுத்து இன்று மிலேச்ச நெறியின் வாஞ்சை பிடித்து பூநூல் மட்டும் தாங்கி வேறு அந்த நூலுக்குரிய மதிப்பு சிறப்பு பெருமை தொண்டு அன்பு இவையாவும் இல்லாத பேதைப் பிராமணரையே காண்கிறும். ஐயா உம் நிலையில் நீர் பெரியவர்! மிலேச்ச நாகரீகத்து சிக்குண்டு வேடரிடம் சிக்கிவேடஞன இராசகுமாரன் போலாயினீர். இனியாதல் உம்நிலை உணர்ந்து மேல் நெறிக்கு உயருங்கள். இந்த உலகில் வேத நெறி தழைத்திட வேண்டுமெனில் நீங்கள் உமது நெறியைப் பேணிஞல் அன்றி அது சரிவராது. வாஞெலியில் வீடுவீடாகக் கதறின் என்னபிரசாரகர் ஒலிபெருக்கி குளாய் பிய்ந்திட ஊரெல்லாம் கேட்க 100 குளாயில் பிரசாரம் செய்தென்ன சைவசபைகள் தலைமைப் பதவிக்கு சாராயமும் கொடுத்து கூட்டம் நடத்தி நாம் சமயம் வளர்க்குறேம் பாருங்கள் என்று மாநாடு நடத்தி என்ன அவையாவும் பயனிலாது போய்விடும்.

நெல்வயல் இருக்க அதைச் சீராகச் செய்யவோ அல்லது செய்ய வல்லாரிடம் கொடுத்து செய்விக்க மனமிலாது தமதுஉணவிற்காக வேறுநாடுகள் தமது நாட்டிற்கு இவை தேள்வை இல்லாதன எனகழித்து இலவசமென அனுப்பிய மாவில் தயாரித்த பாண் வேண்ட கியூ வரிசையில் நிற்பார் போன்றதாய் முடியும்.

இன்று சைவசித்தாந்தத்தில் கிரியாபாகங்களில் மக்கள் நம்பிக்கை கொள்வது குறவாகவே உளது. கிரியை செப்பமாக நடைபெறுதிருப்பின் அதைப் பின்னர் சைவ சித்தாந்தம் என்று சொல்ல முடியாது. கிரியா பாகங்கள் தான் முக்கியம். இன்று பல பிராமணர் சர்வகலா சாலைகளில் பேராசிரியராக இருக்கிறூர். படித்துள்ளனர். எல்லாம் தெரியும் ஆனுல் அவரிடம் வேத நெறிஉண்டோ எனில் அது காணப்படவில்லை. பேரர்சிரியப் பிராமணர் சர்வகலாசாலையில் நுழையும் போதே தனது நெறிஎல்லாம் கைவிட்டவராயினர். பலர் இதை நம்பமுடியா தெனினும் அந்த அந்த பேராசிரிய பிராமணர்க்கு தமது தெய்வீக நிலையில் ஆன்மபலத்தில் குறைந்தவராக உளர் என்பது விளங்கும். விளங்கிஞலும் அதை அவர் வெளியால் சொல்லார்.

தூய நெறி நின்று கிரியை பூசை ஒழுங்காகச் செய்யும்பிராமணரையும் இவரையும் ஒப்பிட்டுப் பார்த்தால் கிரியை ஒழுங்காகச் செய்வாரிடத்து ஓர் தெய்வீகக் களைமுகத்தில் காணலாகும். ஆனுல் பேராசிரியர் ஆசிரியர் ஆங்கில வைத்தியர் கோவிலில் கலியாணம் செய்பவர் ஒலிபெருக்கி பாவிப்பவர் பொய் சொல்லிஏமாற்றுபவர் இவர்களது முகத்தில் ஓர் விகாரமான கொரூரமான தன்மை தென்படும். ஒருக்காலும் அவர்முகத்தில் தெய்வத் தன்மை இராது. பலபேராசிரியர் வைத்தியர் என்சினீயர் லிகிதர் ஆசிரியர்ஆனபிராமணர் இவர்கள் கலந்து வாழும் மக்கள் எப்பொழுதும் தூயநடத்தை இல்லாதவர். அவருடன் இவரும் சேர்ந்து பொருளுக்காக சுகமான வழி எனப் போனுல் அவர்களது தெய்வநிலை அற்றேவிடும்.

இதனை வள்ளுவரும் தம் குறளில் சொலும்போது பொருள் இல்லார் பின்னுல் தேடியும் பெறலாம். ஆனுல் அருள் இல்லார் அதனை மீளப் பெற முடியாது. இன்று பிராமணரல்லாத குலத்து இளையனும் உத்தியோகப் பார்க்கும் பிராமணரது பிள்ளையையும் நாம்நோக்கி வேறு காணமுடியா திருக்கின்றது. சில பிராமணரது பிள்ளைகளிலும் மறு குலத்து பிள்ளை களுடைய முகத்தில் தெய்வக்களை இருப்பாகக் காணலாகும். ஆனுல் பிராமணர் இன்றுஇதைச் சிந்தியார். இன்று உத்தியோகம் பார்க்கும் பிராமணர் உபநிஷதம் முதல் வேதாந்த நூல்கள் கற்றுள்ளார்கள் வெளியில் பேசு

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வார்கள். வானொலியில் நன்கு பேசுவார். ஆனல் இவருடையகல்வி நெறி இல்லாத போது பயனற்றுப் போகின்றது. ஒருவர் தான் ஒழுக மாட்டாதை பிறர்க்குச் சொல்லிப் பிரயோசனமாகாது.

ஆதலால் மேடைப் பேச்சால் சைவ சித்தாந்தத்தில் நன்மை பெறமுடியாது. சைவ சித்தாந்ம் மந்திரம் பதங்கள் வன்னம் புவனங்கள் தத்துவங்கள் ஐந்துகலைகள் எனப்படும் ஆறு அத்து வாக்களின் நிலையைக் கொண்டது. அவை அவைக்குரிய நெறிப்படி ஒழுகலால் பெறப்படுவது.

கோவில் சைவசித்தாந்தி கட்கே உரியது. வேதாந்தி கட்கே தேள்வை இல்லை. வேதாந்திகள் சமயப் பிரசாரத்தை தாங்கள் புறிம்பாம ஓர் மடங்கட்டி அதில் வைத்தலே நலம்.

இன்றைய மடாதிபதிகள் யாரும் வேதாந்த நெறியில் உள்ள வருமில்லை சித்தாந்த நெறியில் உள்ளவர் என்றும் இல்லை. அவர்களை எனது அபிப்பிராயப்படி சமய வியாபாரிகள் என்றால் அது தான் உகந்தது. இவர்களை அழைத்து கோவிலில் மேடை ரோட்டு ஆசனம் கொடுத்து பிரசங்கம் செய்விக்கிறார்கள், இது மிகப் பெரியபாதகம் கோவிலைக் கோவிலுக்குரிய விதிப்படி பேணி அங்கு அதற் குரிய நெறிகளை பேணிக் கொள்ளலே நன்று. திருஞான சம்பந்தர் வலம் வந்து திருமுன்பு வீழ்ந்து வணங்கிய கோவில்களில் மேடைமேல் மடாதிபதி பிரசங்கம்செய்வதைப் பார்த்து இதைத் தொடர்ந்து எத்தனையோ பழிபாதாகம் பெருக்கும் செயல்கள் மேடைமேல் கோவில்களில் நடை பெறுவது என்றால் அது சித்தாந்த நெறியல்ல. வேதாந்தி தான் பிரமம் என்று கூறி கோபுரத்தின் மேலும் ஏறி இருக்கலாம். அதைப்பற்றி நமக் கொன்றும் இல்லை. இன்று பஞ்சமா பாதகம் கோவிலில் புரியும் பிராமணர் திருவிழாக்காரர் தம் செயலிற்கு வேதாந்தம் பேசிக் காட்டுகிறார். இந்தப் பொய் வேதத்தாந்திகளால் நம் தமிழினம் நெடுகத் துயரப் படுமே அன்றி இவர்க்கு திருவருளின் இன்பம் பெருகாது.

# கைதடியில் தேர் ஏற்றிய சுவாமியை உடன் திருப்பி இறக்கினர்.

## கோவிலில் முட்டும் முனிவும் உயர்ந்தது. அன்பும் அருளும் அகன்றது. பிடிவாதக்கொள்கையும் ஆணவ இறுமாப்பும்இறைவன் சந்நிதி என்பதையும் மறக்கவைத்தன. இறைவன் சந்நிதியில் ஏகப்பட்ட நல்உணர்வுகள் சிதைந்தன. நெடுங்காலப் பழிகள் நீங்காது மிகுந்தன.

கைதடி பிள்ளையார் கோவில் ஒன்றில் சென்ற சித்திரை மாசத் திருவிழாவில் தேர் உற்சவமொன்றில் தேருக்கு எழுந்தருளிச் சென்று தேரில் ஏற்றப்பட்ட சுவாமி உடன் திருப்பி இறக்கப் பெற்றது. தேர் இழுபடவில்லை. இத்தகைய நிகழ்ச்சிக்கு காரணம் நிர்வாகத்தினரால் விரும்பப் படாத சிலர் தேர் வடம் பிடித்து இழுப்பதே காரணம் எனத் தெரிவிக்கப் பட்டது. ஏராளமான மக்கள் கூட்டம் தேர் இழுக்க தயாராக இருந்தும் இந்த சிறுதகராற்றால் நிர்வாகம் தேரால் சுவாமியை இறக்கியது. தேரில் ஏறிய சுவாமி செம்பு என்று தான் நிர்வாகம் கருதியதோ என்னவோ தெரியாது! இவர்களில் சிலர்யோகசுவாமிகளின் அன்பர்கள். சிவதொண்டன் நிலையம் கைதடி சைவ அநாதை இல்லம் தமிழர் விடுதலைக் கூட்டணி கைதடி சைவ மகாசபை இவற்றின் பிரமுகர்களாகவும உளராம். இது வன்றி யாழ்ப்பாணப் பகுதியின் அரசாங்கப் பிரிவின் தலைமை அத்தியட்சகர்கள் வைத்தியர்கள் ஆசிரியர்கள் இலங்கைப் பல்கலைக்கழக விரிவுரையாளர் கள்பலரும்இவ்விடயத்தில் தலையிட்டனராம். சில சமரச முயற்சிகள் நடந்தனவாம். ஆனல் பலன் அழிக்கப் படவில்லை. உலகில் எல்லா நோய்க்கும் மருந்து உண்டு ஆனல் பிடிவாதம் என்னும் நோய்க்கு மருந்தே இல்லை,

இறைவன் கோவிலை எதிரிகளைச் சுட்டுத் தொலைக்க அடித்துக் கொல்ல செருப்பைக் கழற்றி அடிக்க வசதியான இடம் என எம் மக்கள் கருதுகின்றனர். நாம் ஏன் சொல்லலாம், கோயில் எதற்காக உண்டு என்றால் அந்த இடத்தில் நாம் சென்று அன்பே உருவமான கடவுள் முன்பு வணங்கி நாமும் அன்பு மயமாவதற்காகும். கடவுள் கருணையின் வடிவானவர். இது யார்க்குமே தெளிவாகவுமில்லை அல்லது தெளிந்தாரைப் பேணுவதும் நம் மக்களிடத்து இல்லாத காரியம்.

கடவுள் மலத்தின் தாக்கம் இல்லாதவர். அவர் திருமுன்பு சென்று வழிபடும்போது நம் சிந்தையில் மலத்தின் அழுக்கான காமம் குரோதம் கோபம் முதலியன அகலப்படல் வேண்டும். அதற்கு இடமில்லாது போனல் அங்கு தெய்வம் உறையும் இடம் என்று கருதமுடியாது.

நமது கோவில் வழிபாட்டில் அணுக்கத் தொண்டர் அகத் தொண்டர் புறத் தொண்டர் என எம்பெருமானுக்கு தொண்டு செய்வாரை பெரியோர் வகுத்திருக்கின்றார். இந்தவகையில் தான் முற்காலத்தில் கோவில் உள் சென்று பூசை அர்ச்சனை முதலியன செய்வோரை அணுக்கத் தொண்டர் என்றும் மலர் கொய்தல் தொடுத்தல் படித்திறம் முதலிய சமைத்தில் தூய்மை செய்தல் காவல் செய்தல் இவை செய்யும் தொண்டரை அகத் தொண்டர் அகம்படியார் என்றும் அப்பால் நீட்டுடன் நிற்பாரை புறத் தொண்டர் என்றும் நம் முன்னோர் மொழிவர். இவர்நிலை இவர் இவர் ஒழுக்கம் பற்றி வந்தது.

நீட்டுடையோர் புறத் தொண்டர் என நாம் குறிப்பிட்டது யாது காரணமாக எனின் இவர் மது உண்டல் மாமிசம் புசித்தல் முதலியன செய்வதாலும் மது உண்டாககல் முதலிய செயல்கள் அருளின் செயலிற்கு முரணைப் புரிந்து வாழ்தலின் வந்தது

அணுக்கத் தொண்டரானவர் பிராமணர். அவர்கட்கு சில ஒழுங்கங்கள் உள. உணவில் உடையில் வாழ்வில் செயலில் தூய்மையில் குணத்தில் பல பல கட்டுப்பாடான நியதி உண்டு. நியதி என்பது அவர் அந்தணராக இருந்தால் இப்படி இப்படியான நிலை காணப்படும். இதன் தன்மையை விளங்கிடும் பொழுது பிலாமரம் பிலாப்பழம் தரும் மாம்பழம் தராது அது போன்று மாவும் பிலாப்பழம் தராது மாம்பழம் தரும். இதேபோல் அந்தணர்கட்கு சில நியதிகள் இயல்பான தெய்வத் தன்மையின் குணங்கள் இருக்கப் பெறும்.

அடுத்து அகம்படியார் அகத் தொண்டர் இவர்களும் தூய வாழ்வுடன் கூடியவர் உணவில் செயலில் நடத்தையில் இவர்களைக்கண்ட எவர்க்கும் ஓர் தூயவர் இவர் எனும் தன்மை தோன்ற வேண்டும்.

அப்பால் புறத் தொண்டா என்ற போது இறைவனுக்கு அடியராயினும் வாழ்வில் உணவில் செயலில் கட்டுப்பாடிலாதவர்கள்.

அடுத்து இவர்கள் எப்படியும் நடப்பவர்கள். இதனை வள்ளுவர் தம் குறளில் பிறப்பு எல்லா உயிர்க்கும் ஒரே தன்மையாகும் ஆனல் உயிர்களின் சிறப்பு அவரவர் செய்யும் தொழிலின் வேற்றுமையால் பொருந்தாது என்கின்றார். ஒருவரது உயர்வும் தாழ்வும் அவரவரது செய்யும் தொழில் வேற்றுமை காரணமாக உளது.

இதனை நன்கு நாம் உணர்ந்தால் முன் கூறிய அணுக்கத் தொண்டர் அகம்படியார் இவர்கள் தத்தமக்குரிய செயல் அன்றி வேறு தொழில் செய்வாரேல் அவர் நீசராகின்றார், அல்லது அவரது பிள்ளைகள் வேறு தொழில் செய்வரேல் அவரும் நீசராகின்றார். அவரை நாம் அணுக்கத் தொண்டரென்று சொல்லலாமோ? நீதி உடையோரே பதில் தாருங்கள். அகம்படியாரும் தத்தமக்குரிய தொண்டுகளைச் சரிவரச் செய்ய முடியாத பொழுது வேறு தொழில் செய்ய முற்பட்டால் அவரும் நீசரே!

ஆகையால் அவரவர் செய்யும் தொழிலின் சிறப்புப் பற்றி அவரை கோவில் உள்ளும் புறம்பும் தத்தமக்குரிய இன்ன இன்ன இடங்களில் நின்று வழிபடுங்கள் எனசொல்லிய வாறாகும்.

ஆனல் இன்று அணுக்கத் தொண்டர் அகம்படியார் இவரின் செயலை நோக்கினல் அவர் அத்தகைய தொழில் நின்று வழுவியே உள்ளார். இவர்கள் யாவரும் வேத நெறிக்குரிய தூய்மை இலாது மிலேச்சராகி ஏனைய தொழிலாளிக்கு கொடுக்கக் கூடிய மதிப்பை பிராமணர்க்கே கொடுக்க முடியாத படி பிராமணர் தம் செயலில் வழுவிக் கொண்டனர். பிராமண குலத்தில் பரம்பரையில் பிறந்தனரேயன்றி ஈங்கே ஒரு பிராமணர் வேத நெறிக்குரிய நிலையில் தன்னை தனது அறத்திற்குரியராக வைத்திருக்கிறார் காண்பிக்க முடியுமோ?

அடுத்து சைவர் எனப்படுவார் பூமாலைத் தொண்டு புரிவார் இவர் நிலை யாது? சிலரது பூக்கூடையை பரிசோதித்தால் தெரியும், எந்த ஒரு சைவன் நல் நிலையை வளர்த்து தனது தொண்டை இறைவன் கருணைக்காகச் செய்கிறார். இன்று அகம்படியாரில் மதுவுண்பவர் புலால் உண்பவர் கண்ட கடையில் சாப்பிடுபவர் இல்லையோ? கைதடிப் பிரமுகரே பதில் தாருங்கள். நீங்கள் சைவ அநாதை இல்லம் கட்டினீர் சைவ சபை சிறப்பாக நடத்தினீர் ஆனல் தேரால் சுவாமியை இறக்கிக் கொண்டு போக எந்தக் கட்டிடத்தில் எந்த மகாநாட்டில் பழகினீர்.

முன்பு ஒரு நாள் இந்த ஆலயப்பிரவேசம் பற்றி அரசாங்கம் சட்டம் கொண்டுவர முயன்ற போது சில பெரியார் யோகசுவாமியிடம் சென்று இப்படி சட்டம் வருகிறது அதற்கு முன் நாங்கள் ஆலயப் பிரவேசம் செய்தால் என்ன எனயோகசுவாயைக் கேட்ட போது சுவாமி சொன்னது அதற்கென்ன சட்டத்தைக் கொண்டு வந்து தொந்தரவை ஏற்படுத்து முன் சமாதானமாக நாங்கள் ஆலயப் பிரவேசம் செய்விக்கலாம் என்றார். இதன்படி முதல் நல்லூரில் ஆலயப்பிரவேசம் நடைபெற்றது. அதனலே யோகசுவாமி மீதே அவரது அன்பர் சிலர் வெறுப்புக் கொண்டார். ஆலயப்பிரவேசம் நடந்த நல்லூருக்கு போகாமல் மாவிட்டபுரம் கும்பிடப் போனர் ஒரு அன்பர்.

இதுநடந்தது எனக்குத் தெரியாது. ஒரு நாள் மாவிட்டபுரம் கும்பிடப்போன அன்பர் குங்குமப்பூ விற்பவர் அவர் தனது கடையடியால் போனஎன்னைக் கூப்பிட்டு தேத் தண்ணி குடிப்பம் வாதில்லை கடைக்கு என்று குங்குமப்பூவும் எடுத்து தேனீரில் போட்டு எனக்கும் தந்து தானும் குடிக்கப் போனேம்.

நாங்கள் அந்த கடைக்குப் போகயோகசுவாமி அங்கு தேத் தண்ணிபருகிவிட்டு எழுந்து வந்தார். எங்களைக் கணடதும் சுவாமி தோளில் சால்வையை எடுத்து ஒரு உதறல் உதறிவிட்டு என்னுடன் வந்தவரை நோக்கி ஏடேய் என்னடா சொல்லித் திரிந்தாய் நான் ஏதோ ஆலயப் பிரவேசத்திற்கு ஆதரவு கொடுத்தேன் என சொன்னயாம். எங்கடா ஒரு சைவனை உன்னல் காட்ட முடியுமோ ஆரடா சைவன் போல இருக்கிறன். நீ மாவிட்டபுரம் போறியாம் கும்பிட நான் நினைச்சால் மாவிட்டபுரத்தை இடிப்பிச்சு புத்தர்சிலை அங்கு வைப்பிக்க முடியும். நாங்கள் சிவனடியார்கள்! என்னடா பேதை யாழ்ப்பாணத்தார் நினைக்கிறியள்! மனிதன் மனிதப்பண்புடனல்லவோ வாழ வேண்டும் என்று சிங்கம் போல்கர்ச்சித்தார். கூடப் போன எனக்கும் இரண்டு ஏச்சு நானும் வாங்கிக் கட்டிக் கொண்டு வணங்கிவிட்டுச் சென்றேன்.

இதனை கைதடி மக்களே உணருங்கள். தேருக்குப் போன சுவாமியை இழுத்து வீதியை வலம்வரமாட்டாது தேரால் சுவாமியை இறக்கிக் கொண்டோடிய உங்கள் கோழைத் தனம் போல் வேறு யாதும் இல்லை. இது பலகாலம் நீதியுடன் வாழாது பழகி வந்த பழிகள் உங்களை அன்று இந்நிலைக்குள் ஆக்கியது.

தேரை திரு நீறு பூசிய மனிதர் இழுப்பதிலும் பார்க்க இயந்திரம் இழுப்பது நலம் என்று நினைந்து ரக்ரர் ஒன்று கோவிலடிக்குக் கொண்டுவரப் பெற்றதாகக் கேள்விப்பட்டோம். ரக்ரர் இழுப்பது நன்றோ?எம்பெருமான் தேரில் ஏறினல் பத்தர்கள் புடைசூழ எம் பெருமானது தேரை கையால் வடம் தொட்டு இழுப்பதன்றி இயந்திரமும் இழுக்கலாமா? கந்தபுராணத்து இறந்தாருடைய உடலைத் தான் இயந்திரத்தில் ஏற்றி இழுப்பது எனக்காண்கின்றோம். கடவுள் தேரை அப்படிச்செய்தல் தகாது இதைத்தெளிவீரோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோவிலில் முட்டும்முனிவும் பெருக்கும் ஒலிபெருக்கியாளர் வரலாறுகள்.

## உன்னைக் கும்பிட்டேன் வெளிப்படுத்தாதே.

பரமாச்சாரிய சுவாமி ஒருவர் வெளியூர் போனூர். அவர் பிரசங்கம் வடிவாய்ச் செய்பவர். அவர் பிரசங்கம் செய்வதில் இனிமை உண்டு என்பதால் பலரும் அவரை பிரசங்கத்திற்கு பிடித்து கோவிலில் மேடையும் போட்டு பிரசங்க சுவாமியை இருத்தி வைத்து பிரசங்கம் கேட்பார்கள்.

தூண்டிலில் மீன் பிடிப்பார் போடும் இரையைக் கண்டு மீன் அதைக் கவ்வி பின்னர் அவதிப்படுவது போன்று அவர் பிரசங்கத்தில் சிக்குண்டு கேட்பார்கள். கோவில் மூர்த்திக்கு அபிஷேகத்திற்கு பால் இல்லாது போயினும் பிரசங்கச் சுவாமிக்கு பால் இருக்கும். அத்துடன் காசு! வெளியூர் போன சுவாமிக்கு பணம் ஏராளம் சேர்ந்து கொண்டது. அதை வெளிப்படுத்திக் கொண்டு வர முடியவில்லை. அதனுல் கடவுள் கோலத்தில் சிலை ஒன்றினைக் கொண்டு போவதாகச் சொல்லி அதற்குள் தாம் சேகரித்த காசைத் தங்கமாக மாற்றி மறையவைத்து அந்த நாட்டின் சுங்க அதிகாரிகளை சாமிக் கோலத்தாலும் சிலையாலும் தாம் ஒன்றும் களவாய் கொண்டு போகவில்லை எனக் காட்டி இங்கு வந்தால் இங்கு சுங்க அதிகாரிகள் அவர் சிலையினை சந்தேகத்தின் பேரில் சோதித்த பொழுது அதற்குள் பொன் இருக்கக் காணப்பட்டது. அதனுல் அப்பொன்னை பறிமுதல் செய்யப் படுமுன் பரமாசாரியுர் வில்லங்கப் பட்டார்.

அதனை சோதித்தவர் ஓர் பெண் அப்பெண்ணிடம் சென்று அம்மா வாயாலும் கும்பிடுவேன் கையாலும் கும்பிடுவேன் இவை எல்லாவற்றையும் எடுங்கோ ஆனுல் வெளிப்படுத்தாதீர். நம்பாடு பின் வாழ முடியாது என கெஞ்சினுராம். பின்னர் அங்கு சுங்க அதிகாரிகளின் மேலதிகாரி ஓர் சைவராக இருந்த படியால் ஒருமாதிரி விடயம் சடையப்பட்டு மேல் நடவடிக்கை இன்றி சுவாமிகள் வெளியில் அனுப்பப் பட்டாராம்.

இவ்வாறு அந்த சுங்க அதிகாரியாக அன்று கடமை புரிந்த ஓர் பெண்மணி தம்மிடம் தெரிவித்ததாக ஓர் இளைப்பாறிய ஆசிரியர் நம்மிடம் செய்தி தெரிவித்தார்.

## நாவலர் சிலைவரவெற்பில் விருந்து உண்டசிறப்பு

ஆறுமுகநாவலர் விழாச் சபையார் கொழும்பில் நாவலருக்கு சிலை செய்து விழா எடுத்து பின்னர் அதை இங்கு கொண்டு வந்தார்கள். அதில் பெரிய ஐயாமார்கள் கலந்த படியால் அது விழா பெரிது. அதன் படி சிலை யாழ்ப்பாணம் வரும் போது முறிகண்டியில் வைத்து அதனை வரவேற்கும் படி ஒழுங்கு செய்யப்பட்டது. அக்காலத்து இருந்த அரசாங்க அதிபரும் ஏனையோரும் அரசியல் பிரமுகரும் அதன் வரவேற்பில் கலப்பதாக ஏற்பாடு,

ஏற்பாட்டின் படி முறிகண்டிக்கு சிலை 5மணிக்கு வந்து சேர்வதாக இருந்தது. அதனுல் யாழ்ப்பாணப்பகுதி அரசாங்க சேவையில் ஈடுபட்டிருந்த திணைக்களப் பெரியார்கள் காரியாதிகாரிகள் பல பிரமுகர்கள் எல்லாரும் முறிகண்டியில் 5 மணிக்கு முன்பே வந்து சேர்ந்தனர்.

5 மணியானது சிலை வரவில்லை. 6 மணியாயும் வரவில்லை. 7 மணியாயிற்று காணவில்லை. உடன் அக்கால் அரசாங்கத்தில் கடமை புரிந்த சிரேஸ்ட காரியாதிகாரி ஒருவர் கனிஷ்ட காரியாதிகாரி ஒருவரை அழைத்து இப்பகுதி உமது பிரிவில் உளது; இங்கு கூடி இருக்கும் அரசியல் பிரமுகரை விருந்திட்டு உபசரிப்பது உம் கடமை என்றதும் அப்போ இவர்கட்கு சிற்றுண்டி தேனீர் இவற்ருல் உபசரிக்கலாமோ எனக் கேட்டார் கனிஷ்ட அதிகாரி. உடன் சிரேஷ்ட அதிகாரி இல்லை சிலை வர நேரம் எடுத்தாலும் எல்லார்க்கும் டினர் இராப்போசனம் கொடுக்க வேண்டும். அதுவும் அவர் அவர் விரும்பி உண்ணும் உணவே பரிமாறப் படவேண்டும். இல்லாதிருந்தால் மதிப்பில்லை என்றதும் அக்கால் அரசாங்க அதிபர் முதல் பலரும் விரும்புவது ஊன் பொருள் ஆனதினுல் இரவு போசனம் அம்முறையில் தயார் செய்யப்பட்டது.

மூன்று கோழிகள் பொழுது படுகின்றது. நாம் ஆறுதலாக இனி இரை தேடுவதன்றி நித்திரையாகலாம் என எண்ணியவை ஒரே நித்திரையாகும்படி ஆக்கப்பெற்று கறிகளான ஊண் உணவு அமைந்தது. அத்துடன் விருந்தினர் விரும்பும் ஓர் நீளப் போத்திலும் வந்தது. இவை யாவும் இனிதே கைகூட முறிகண்டி எஜமானர் மாளிகையில் வரவேற்பாளர் யாவரும் விருந்துண்டு மகிழ்ந்து மலர்ந்து எழுந்து வர நாவலர் சிலையும் வர கணக்காக இருந்தது.

நாவலர் சிலை வரக் கண்டு மகிழ்ந்து மலர்ந்து யாழ்ப்பாணத்து மிகப்பெரியார் இவர் எனக் கூறி மலர் மாலை சூட்டி வணங்கி மகிழ்ந்தனர். இப்படியாக நாவலர் வரவேற்பு குதூகலமுடன் நடைபெற்றது என அக்கால் அரசாங்க சேவையில் கடமை ஆற்றிய ஓர் அன்பர் அந்த வரவேற்பில் பங்கு கொண்டவர் என்னிடம் இச்செய்தியைத் தெரிவித்தார்.

ஒரு நாள் யோக சுவாமி என்னை நோக்கி நாவலர் ஓர் தூய பிரமச்சாரி அதற்கு மேல் என்று மிச்சம் ஒன்றும் சொல்லவில்லை.

## காரணம் இன்றி ஒருநாள் பூசை குழப்பம்

திருமுருககிருபானந்த வாரியார் மிகு பிரபல்ய முடன் பிரசங்கம் செய்தாரல்வா கொக்குவில் மேற்கு மஞ்சவனப் பதியில்! அந்த தலத்து எழுந்தருளி வந்த மூர்த்தியையும் நீயும் வாரியாரை இருந்து கேள்! அவர்எனத வடிவாய்ப் பேசுருர்! இவ்வளவு சனமும் அவருக்காக பறந்தடித்து விழுந்தடித்து வருகிறது. இதைப்பார்; சயிக்கில் வாடையில் நாங்கள் வாரியார்க்கு கொடுக்கும் காசையே சேகரித்துள்ளோம். என் றெல்லாம் வாரியார் வரவேற்புச் சபை வாரியார்க்கு மலரும் வெளியிட்டு பூமாலை போட்டு போற்றி புகழ்ந்து பொய்யை மெய்யாக்க நாம் அது கண்டு ஆத்திரத்தில் அல்ல பொருமையில் அல்ல இப்படி எல்லாம் செய்தல் கோயில் ஒழுங்கிற்கு நன்றல்ல. இந்த வகையான முட்டுக்களால் பின் இடைஞ்சல் வரும் கோயிலில் அருள் பெருக்கம் இராது அன்புநெறி கெடும் பகைவளரும் மக்கள் கருத்து வேற்றுமை கொள்வார். கிரியைகளில் தவறுகள் நேரும் என்று கொஞ்சம் ஆகமவழிகளை நம் பெரியோர் காட்டிச் சென்ற நல் நெறிகளை பின்பற்றி போவோம் என்றேன்.

எனது சொல்லை ஏற்ருர் ஏற்கவில்லை ஏற்கமாட்டார் என்ற கருத்துக்கூட நாம் கொள்ளவில்லை. நமது பணி இறைவனுக் குரியது அவன் இருப்பிடம் புனிதமுடன் புண்ணிய நிலையுடன் விளங்க வேண்டு மென்பது என்ணமாக இருந்தது.

இப்பொழுது மஞ்சவனப்பதியில் தடுமாற்ற நிலை ஏற்பட்டுக் கொண்டது. அக்கோயில் 6 காலப் பூசை நடைபெறுவது. ஆனுல் சென்ற சமீப நாட்களில் ஒருநாள் மூன்று காலப் பூசை நடைபெருது. ஒருகாலப் பூசையே நடைபெற்றது. மூன்றும் ஒன்ருய் நடைபெற்றது.

பூசை செய்யும் குருக்களுக்கு சுகயீனமோ? என்ருல் இல்லை. அவர்க்கு துணையாக அவர் இல்லாத நேரம் பூசை செய்யும் அவர் தம்பி அவரும் வீட்டில் இருந்தவர் வெளியால் ஒருவநும் போகவில்லை ஆனுல் கருத்து தமாற்றம் அன்று எழுந்ததால் சிக்கல் வந்தது. தவறிய பூசைகளைப் பின்னர் ஒருகாலம்மாகச் செய்தார்.

திருப்பணிச்சபையார்க்கு இது தெரிவிக்கப் பட்டது. திருப்பணிச்சபையார் என் செய்வது என்ற தடுமாற்ற நிலையில் உள்ளார் களாம் முன்னுள் செனட் சபை அங்கத்தவராக உள்ள ஓர் தனவந்தர் பெரும் கொடையாளி இத்திருப்பணிச்சபைக்கு தலைவராய் உள்ளார். வடமானில வைத்திய அத்தியட்சகர் ஒருவர் இத் திருப்பணிச்சபைக்கு காரியதரசியாக உளர் இப்படி பல பெரு மக்கள் சபையில் இருந்தும் தடுமாற்றம் நிலவுகின்றது.

அடுத்து வாரியார் வரவேற்பு சபையார் சேகரித்த பொருள் எவ்வளவு சயிக்கிள் வாடை முதலிய வற்ருல் வந்த பணம் எவ்வளவு இதற்கெல்லாம் கணக்கு உண்டோ? சேகரித்த பணத்தில் வாரியாருக்கு கொடுத்தது போக மிகுதி என்னுயிற்று! அதைப் பற்றி வரவேற்பு சபையார் பொது மக்களுக்கு ஓர் விளக்கம் காட்ட வேண்டு மென்று இப்பத்திரிகை மூலம் அன்பர்களுக்கு ஓர் செய்தியை வெளிப் படுத்திக் கொள்கின்ருர். கொக்குவில் மேற்கைச் சேர்ந்த திரு கந்தையா எனும் அன்பர்.

எல்லாப் பெரியாரும் இருந்தும் இப்படியும் நிகழ்ச்சிகள் நிகழ்வுறுகின்றன. இதனை எழுதும் போது கந்தபுராணத்தில் ஒருகட்டம் நினைவுவருகிறது. அதுதான் சூரன் தனது ஆணையால் உலகை ஆண்டான் மிகப் பிரபல்யமாக ஆண்டான் அவன் ஆணையைச் செலுத்த எத்தனையோ அசுரர் சேனுதிபதிகள் மந்திரிகள் பிரதானிகளாக இருந்தனர். எல்லாம் மிகு சிறப்பு. போக இன்பங்கட்கு குறைவே இல்லை. அவன் ஆட்சியில் அணுக்குக்கூட உத்தரவில்லாமல் உள்ளே நுழையாது.

இப்படி இருக்கும் போது தான் வேத நீதிக்குரிய அறிவு சொருபமான வீரவாகு தேவர் தூதாகச் சென்று தனித்த ஒருவர் பல துயரங்களை அவன் நேரில் காணுமாறு செய்துமீண்டு போகின்ருர். அவரின் செயலால் தனக்கு நேர்ந்த அழிவுகளை நோக்கி சூரன் ஓர் மந்திரி சபை கூட்டி ஆலோசிக்கிருன் அதில் எழுந்த ஒருவாக்கியம் ''எல்லீரும் நாம் பெரியவராகஇருந்தோம். ஆர் இருந்தும் என்? இப்படி நடந்ததே'' என்கின்ருன் நீளவும் மிளவும் கோபம் கொள்கின்ருனேஒழிய தனக்கு நேர்ந்த துன்பத்திற்கு காரணம் தானே என்பதை உணராது இருக்கின்ருன். ஒருவர் பெற்ற செல்வத்தின் உயர்ந்த நிலையில் ஏற்படும் செயல்கள் எந்த கல்விமானுடைய நல்லுணர்வையும் கடந்து நிற்கும். நமது வார்த்தைபலருக்கு ஏற்கப்படாவிடினும் இவை கந்த புரணத்து தெளிவுற்ற உண்மைக் கருத்துக்கள் இவை போல்வன பல உண்டு.

## திருவிழாக்கள் செய்ய மறுத்தாரோமறந்தாரோ

ஆனைக்கோட்டை உயரப்புலம் பிள்ளையார் கோவில் உற்சவம் நடைபெற்று முடிந்தது. சில உபயகாரர் உபயம் செய்யவில்லையாம். தேர் உபயகாரர் கைவிட்டார். இப்போதுள்ள திருப்பணிச்சபையில் அவர் ஒரு நிர்வாகி. முன்பு ஒருநாள் தமது உபயத்தை பண்புடன் செய்யும் ஓர் ஆசிரியர் ஒலிபெருக்கி தனது உபயத்தில் பாவிக்க வேண்டாம் எனச்கூறிட; அதுகேட்டு கலங்கி கண்ணீர் விட்டு பிரதிட்டா இரத்தினம் என்னும் பட்டமுடைய கோவில் ஐயர் வருத்த முற்று தேர் உபயகாரனை இவரை ஏவி நீங்கள் போய் ஆசிரியரை ஒருமாதிரி ஒலிபெருக்கியை பிடிக்கப்பண்ணுங்கோ எனச் சொல்ல அது கேட்டு ஐயருக்காக ஒலிபெருக்கி பிடியுங்கோவன் அதுஇல்லாமல் என்ன திருவிழா என ஆசிரியரை கைவிட்டதேர்உபயகாரர் கேட்டவர். அது வன்றி தீர்த்த உபயகாரர் அரைவாசி செய்யமிகுதி அயலவர் செய்து முடித்தார். காசு உள்ளவர் கோயில் கட்ட காசில்லாதவர் கொமிற்றியில் நியாயம் பேசுறதோ என்பது தானும் திருவிழாக்களைசிலர் கைவிட வேண்டி வந்தகாரணம். காசுக்காறருக்குத்தான் கோயில் நிர்வாகம் சுருட்டுத்தொழில் செய்வார்க்கு இல்லை என்பதால் பிரிவு வந்ததுஆனுல் கைவிடப்பட்ட திருவிழாக்களை சுருட்டுத் தொழிலாளர் செலவு செய்து இனிதே நடத்தினுர். பிரச்சினைக்கு பிரதிட்டா இரத்தினம் புங்குடுதீவைச் சேர்ந்தது பிரசித்திபெற்ற கோகிலாம்பாளின்இனத்தது. விட்டில்இருந்து சென்றுநித்தலும் கொடியேற்றி பூசைபண்ணி தன் பிரதிட்டைகளைச் செய்வது. இதற்கு கோகிலாம்பாள் புகழ் பத்திரிகையில் வெளிவந்தது போன்று ஒலிபெருக்கியில் தன் மந்திரம் ஓதலின் சாமாத்திய ஊருக்கு காட்டுவது. அதோடு மந்திரம் இடையில் அங்குள்ளாருடன் பேசுவதையும் தன்பிள்ளைகளை உதவியாளரைக் கடிவதையும் சேர்த்து ஒலிபெருக்கி மூலம் உலகிற்கு வெளிப்படுத்தி காட்டுவது. இங்கு சங்கா பிஷேகத்தின் போது ஒலி பெருக்கி மூலம் கேட்கப்படும் பேச்சுக்கள் பூசை மந்திரம் எல்லாம் ஒரு வெருளிக் கூத்தாகவே இருக்கும்.

## திருநீற்று பார்வையுடன் குருவின் பார்வையும்

சுண்ணகத்தில் ஓர் சிவன் கோவிலில் ஓர் ஐயர் பார்வை பார்க்கிறவர். அவர் தற்காலத்தில் கோவிலில் எதுவும் செய்யலாம் எல்லாவற்றிற்கும் இடமுண்டு என்ற கொள்கை உடையவர். பூசைத் திரவியம் குறைந்தாலும் ஒலிபெருக்கிஉண்டானுல்எல்லாம்சரிஎன்பவர் ஒலிபெருக்கியில் பேசி பேசுவித்து பேச்சு மூலம் குறைகளை நிரப்புவார் இவரது திருநீற்றுப் பார்வையில் நம்பிக்கையுற்ற ஒருவர் தனது நோயுற்ற பெண்ணை அழைத்துச் சென்ருர். ஐயர் அப்பெண்ணின் இயல்பு குணம் எல்லாம் ஓர் இருமுறையில் தெரிந்த பின் மூன்ரும் முறை திருநீற்றுப் பார்வையுடன் தன் பார்வையையும் தனித்த ஓர் அறையில் நடத்தினுர். அப்பொழுது அப்பெண் பாவம் என் செய்யும் வெளியால் வந்து தன் உறவினரிடம் பார்வையின் திறத்தை சொல்லாமல் சொன்னுள். அது கேட்டு ஆத்திரமுற்ற அவளது உறவினர் ஐயரை மெதுவாகத் தட்டி நீர் இப்படி இனிமேல் செய்யாதையும் சொன்னாரம்; இச்செயலால் பெரும் பரபரப்பு அக்காலத்தில் நிலவியது; இப்பொழுது எல்லாம் ோமல்.

## இப்பத்திரிகை

இப்பத்திரிகை கொக்குவில் மேற்கில் இருக்கும் கந்தபுராண பெரிய புராண உரை ஆசிரியர் வை.நல்லையா அவர்களால் இலங்கை மணி சைவ நூற்பதிப் பகத்தில் பதிப்பிக்கப் பெற்று வெளியிடப் பெற்றது.

இப்பத்திரிகையைப் பெற விரும்புவோர் சந்திர தீபம் கொக்குவில் என்ற விலாசத்தில் பெறலாம். வருட சந்தா ரூபா—16 ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காவாலித்திருவிழாவால் கண்துயிலல் அதுவன்றிகும்பிடவும்முடியவில்லை.

உலகில் திருவள்ளுவர் சில நீதிகளை நமக்கு சொல்லி உள்ளார். அவர் அதனைச் சொல்லியது தனக்காகவன்று. அவரது நீதிகளில் ஒன்று உலக மக்களை நோக்கி நீவிர் பொருள் தேடினீர் புகழ் தேடினீர் இவையால் சில இன்பதுன்பம் அநுபவிப்பீர். ஆனல் உம்மால் பெறக் கூடிய இன்னுமொரு பொருள் உண்டு. அப்பொருளை ஒழுங்கானதாகப் பெற்ருல் உமக்கு இப்பிறப்பல்ல ஏழு பிறப்பிற்கும் தீயவை தீண்டமாட்டாது என்கின்ருர். அப்பொருள் யாது என்ருல் அதுதான் உமது பிள்ளைகள் என்கின்ருர். இதனை எழுபிறப்பும் தீயவை தீண்டாது பழி பிறங்காத பண்புடைய மக்களைப் பெற்ருல் என்கின்ருர்.

பழி பிறங்காத பண்புடை மக்கள் என்ருல் அவர் யாவர் என்பதுதான் கேள்வி? பழி பிறங்காத என்றதின் அர்த்தம் யாது? அப்பிள்ளையால் ஏதும் ஒரு துயர் இன்னுமொரு உயிர்க்கு நேராமல் இருத்தல் எனலாம். கன்னிப்பழி கோயில்பழி கொலைப்பழி பெரியோரை இகழும்பழி என்றெல்லாம் பல பழிகள் இளம் பருவத்தே ஏற்படுதல் உண்டு. இவை இவை அப்பிள்ளைகளிடம் ஏற்பட ஏற்பட அது யாரைப் போய் சேரும் என்ருல் அப்பிள்ளையின் தாய் தந்தையரையே சேரும் என்றதால் பழி பிறங்காத மக்களை பெற்றிடுவீர் என்ருர்.

இதனுல் தந்தை தாயர் இறந்தாலும் பின்னர் துயரப்பட்டு மீண்டும் பிறந்து அதிலும் பெரும் துன்பப்பட்டு சொல்லொணுத துயரத்தை அநுபவிப்பார். ஒரு பிறவியில் பெற்ற பிள்ளையின் துர் நடத்தையால் ஏழு பிறப்பும் தீமையே பெருகும் இதனின்றும் விடுதலை அடைய விரும்பின் பிள்ளைகளைப் பெற்ருல் ஒழுங்கானதாகப் பெறும் இல்லாதிருந்தால் உதவாக்கரையானதை பெற்ற தோஷம் உம்மைப் பீடிக்கும் என்கின்ருர்.

இந்த ஒரு உண்மையை எந்த ஒரு கல்லூரி வளாகம் சர்வகலாசாலை ஏற்குமோ எனக்குத் தெரியாது? ஆனல் அவர் கேட்கலாம் விஞ்ஞான ரீதியில் நீர் இப் பழி தந்தை தாயாரை சேர்கின்றது என்பதை உணர்த்திக் காட்ட முடியுமோ எனக் கேட்டால் என்னிடத்தில் உங்கள் சர்வகலாசாலையில் ஆய்வு கூடம் போன்ற வசதிகள் இல்லாதிருப்பினும் எனது அறிவால் சில காரணங்கள் காண்பிக்கின்றேன்.

ஒருவர் இறந்தால் எமது சைவநெறியில் சவக்கிரியை அந்தியேட்டி வீட்டுக்கிரியை என்பன உண்டு. இவையாவும் இறந்த உயிரின் ஆன்ம சாந்திக்காகச் செய்யப்படுவன என்பது நூல் துணிபு. இதிலே 31வது நாள் செய்யப்படும் வீட்டுக் கிரியையில் அந்தணர்க்குத் தானம் வழங்கப்படும். இதில் அந்தணரிலே ஏகோ திட்டம் என்ற ஒரு கிரியைக்கு தனித்த ஒரு அந்தணர் அமர்வார். அவரிடம் தானம் வழங்கப்படும். அந்தத் தானத்திலே ஒன்று இடபதானம் இந்த இடபதானத்தின் அர்த்தம் என்ன என்பதே ஆராய்ச்சி. அதாவது இறந்தவரின் பெயரால் ஒரு இடபம் [எருத்துமாடு] அதனை வருத்தி வண்டில் பூட்டியோ கொலைகாரரிடம் கொடுத்து கொலை செய்வதோ இல்லாமல் அது தன் இடப்படி திரிய விடுதலை செய்வதாகும்.

இதன்படி ஏகோதிட்டத்திற்கு வந்த அந்தணர் கையில் ஓர் இடபம் கொடுபடும். ஆனல் பெரும்பாலும் இன்று இடபம் கொடுக்கப்பெருது அதற்குப் பதிலாக ஐயரிடம் தட்டத்தில் அரிசி தேங்காய் காசு இவை கொடுக்கப்படும். அப்பொழுது அந்த ஐயர் தட்டத்துடன் பொருளை வைத்து அதை இடபமாகப் பாவித்து கிரியை செய்வாரை நோக்கி இதைக் கொஞ்சம் வடக்குப் புறம் இழும். பிறகு கிழக்கால் அரக்கும் பிறகு தெற்கு பிறகு மேற்கு இப்படி இழுத்து தட்டத்தை அரிசியுடன் அரக்கச் சொல்லிச் சொல்லி ஒவ்வொரு தடவையும் ஒவ்வோர் சுலோகம் சொல்வார். அதன் பொருள் நான்கு திசைக்கும் சொல்வது ஒரு கருத்தாவது. அது யாது என ஆராய்ந்தால் அது வருமாறு.

"இடபமே! உன்னை இவ்வுலக மக்கள் கட்டிவைத்து இனியும் துயருறுத்தாதபடி நான் விடுதலை செய்கிறேன். நீ வேண்டிய அளவு வடக்கே போய் இரைதேடு! ஆனல் கோயில் சொத்தும் பிராமணன் சொத்தும் தீண்டாதே! கிழக்கும் நீ அப்படியே தெற்கும் மேற்கும் அப்படியே என அந்த இடபத்திற்கு மொழிவதாகும்,

சற்பனையாக நாம் இதைக் கருதினுலும் கருத்து மட்டும் ஆழமாக இருக்கிறது,

ஓர் உயிரை வதைத்து துன்புறுத்தல் பழி என்றது புலப்படுகிறது. அத்துயருறுத்துப் பழியில் நின்றும் விடுதலையாக்கல் புண்ணியம் என்பதும் புலப்படுகின்றது. ஆகவே பிதா மாதா இருவர்க்காக பிள்ளை செய்யும் சிறப்பு பழி வருவிக்கும் செயல் அத்தனையில் நின்றும் தான் நீங்கலேயாகும் என்பதை நாம் உணரலாம்.

கலிகாலத்தில் மிலேச்ச நாகரீகத்து ஊறி நிற்பார்க்கு அந்த நாகரீகத்தில் விளையும் பாவத்தால் கலிகால தர்மத்தினுல் பெருகும் இச்சைப் பெருக்கத்தால் இவை விளங்காது! விளங்கினுலும் நம்பிக்கை கொள்ளார். நாம் அதற்காக உண்மையை எடுத்துச் சொல்ல வேண்டிய தருமத்தில் நின்றும் தவற மாட்டோம்.

அடுத்து இன்றைய தமிழ் சைவ இளைஞர்கள் இதனை இகழவும் கூடும். மச்சான்! நீ உதை நம்பிறியோடா எனவும் கேட்பார். இப்படிச் சொல்லிவிட்டு இரண்டு நக்கலுடன் சிகரெட்டும் பத்தி மச்சான் பிதா மதா என்றதெல்லாம் பொய் வேலையடா எனவும் சொல்வார். இன்று எமது சைவ இளைஞர் பலர் தமது தாய் தந்தையர்க்கு எவ்வாற்ருலும் கட்டுப்படாத நிலையில் உள்ளனர். சில குடும்பங்களில் மக்களுடன் பேச தாய் தந்தையர் அஞ்சுகின்றனர். ஏன் எனில் ஒன்றில் இறுக்கிச் சொன்னுல் அடி விழும். இல்லாதிருந்தால் நஞ்சருந்திச் சாதல் இதனுலேஇன்றைய உலகில் தமது பிள்ளைகளின் போக்கைக் கண்டும் காணுதவர் போல் திரிகின்றனர்.

சில தந்தை தாயர் தமது பிள்ளைகள் என்ன அட்டாதுட்டி கொடுமை பிறர்க்குச் செய்தாலும் அத்தனையும் சரி என்றே ஏற்கின்றனர். இந்த நிலையில் தம் புதல்வர் மதுவுண்டு கற்பழித்து பாதகங்கள் பல செய்தாலும் தாய்தந்தையர், அது சரி. பிறர் அத்தவற்றைப் பேசக்கூடாது என்றே சொல்கின்றனர் தமது புதல்வரது செயலால் விளையக் கூடிய பாதகத்தை உணர முடியாதிருக்கின்றனர். மிலேச்சர் வழியில் ஊறிடும் அவர்க்கு இப்பழி என்ன செய்யும் என்பதை கிரகிக்க இயலாது, ஆனல் இப்படியான பழிப்பெருக்கங்கள் பெருகிப் பெருகி இவரோடு அமையாது. இவர் சுற்றம் சூழ்வோர் அத்தனையையும் என்றும் நீங்கார்த துயரத்தில் ஆழ்த்திவிடும். எல்லாவற்றிலும் கொலைப் பழி பொல்லாதது.

இந்தப் பழிகள் இனப்பகை தெய்வநம்பிக்கை இன்மை கொலை களவு வாழ்வில் சாந்தமின்மை மனஅடக்கலின்மை இரக்கமின்மை இவைகளைப் பெருக்கும் நீதியை வழுவடையச் செய்யும்'

இவ்வகையால் பின்னர் அச்சமூகமே நலிவுறும். பிறர் நம்கு சதை நலிவர். நீதியீனத்தை எதிர்த்து பேசமுடியாது. நம் நாட்டில் இன்று நடைபெறும் இனக் கலவரங்கள் நிகழப்பட வேண்டிய காரணமும் இப்பழியின் பெருக்கமே என்பது உண்மை!

ஆதலால் பழிபுரியும் பல இளைஞர் இன்று நமது கோவிலை ஆக்கிரமித்துக் கொள்கின்றனர். இத்தகைய பிள்ளைகளை ஊக்குவித்து திருவிழாவை நடத்திட பிராமணர் துணிகின்றனர், இத்தகைய பிள்ளைகட்கு படம் பார்க்க மது அருந்த காசும் கொடுத்திடும் நிலை காணப்படுகிறது. மதிப்பினைப் பேணிடும் சமய குரு பிராமணன் இந்த வகை இளைஞர்களது பழுதான வழிகளை ஆதரிக்கின்ருர் என்ருல் எம்சமய நிலை எப்படி?

அடுத்து இத்தகைய நெறியிலாதவர் கூட்டம் கோயிலில் திருவிழா செய்யப் போனவுடன் இவர்களது கட்டுப்பாடில்லாத செயலே அங்கும் மிகுந்து கொள்கின்றது.

இத்தகைய நெறியிலாரை காவாலிகள் எனவே சொல்ல வேண்டி இருக்கின்றது. காவாலி என்றது கட்டுப்பாடிலாதவர் என்றதாகும். கோயிலில் திருவிழாச் செய்யப் போனுல் அங்கு ஒழுங்கினைக் கடைப்பிடிக்க வேண்டியது அவசியம்.

முதற்கண் எந்த திருவிழாவும் மங்கலமுடையதாக அமைய வேண்டும். மங்கலம் என்றதன் கருத்து நிறைவு அடக்கம் என்றதாகும். அது இறைவனுடைய இருப்பிடம என்பதைதத் தமது செயல் மூலம் வெளிப்படுத்துவதாக இருக்க வேண்டும். சிறுமையுடைய மனிதர் வாழும் இருப்பிடமாகக் கோயிலைக்கருதி; அங்கு நாம் விரும்பியபடி எதுவும் செய்யலாம் என்றிருக்கக் கூடாது.

இறைவன் பெருமையுடையவன், நீதி உடையவன், அவன் இருப்பிடத்து எக்காரணம் கொண்டும் அநீதிக்குரிய செயல் மற்றைய மனிதர் மனம் நோகும்படியான செயல் நடைபெறலாகாது. அப்படியாக பலரும் வருந்தும்படியான செயல் கோவிலில் நடைபெறுமேல் நாம் அதனைக் கோவில் என்று சொல்ல முடியாது. அது இன்றைய நிலையில் காணப்பெறும் கள்ளுத்தவறணையாகவே கருதவேண்டி வரும்.

இன்று கள்ளுத்தவறணைகளை எடுத்துக் கொண்டால் கள்ளுத் தவறணையை மக்கள் குடியிருப்பு இடங்கட்கு புறம்பான ஓரிடத்து அமைத்துள்ளனர், ஏன் என்ருல் கள்ளுத்தவறணைகளில் நடைபெறும் செயல்களை நோக்கினுல் அதே பண்புடைய மக்கள் எவருமே நோக்காதபடி உளது. ஓர் கள்ளுத்தவறணையில் மக்கள் மது அருந்தியபின் போடும் சத்தம் காதை அடைக்கும். அதே நிலையில் கள்ளுக் கொட்டிலில் கத்திப்பாடுவார்க்கு ஒலிபெருக்கி ஒன்றும் கொடுக்கப்பட்டால் ஊர் எப்படி இருக்கும், அதுவும் 20க்கு மேற்பட்ட கோண் பூட்டினுல் எப்படி இருக்கும்.

இதே நிலையில் நம் கோவில் திருவிழாக்களும் நடைபெறுகின்றன. திருவிழா என்ருல் அது ஒரு கூக்குரல் என்றதே கொள்கையானது. கோயில் கொடியேறினுல் பனைமரமும் கொடியேறின தன்மை போன்று மதிப்புடன் அமைதியுடன் எவரும் வாழமுடியாத படி வருகிறது. ஐயோ ஊரை விட்டு எழுந்து போனுலோ என்று மனம் நினைக்கிறது, பூங்காவனம் சங்காபிஷேக கும்பாபிஷேகதினம் என்பதெல்லாம் இன்று காவாலிகளின் ஓலத்தை மட்டும் கொள்ளும் நிலையாக உளது.

இப்படியான இத்திருவிழாக்காறர் திருவிழாச் செய்யும் போது தமது திருவிழாவில் அன்று ஒலிபெருக்கி குளாயை காலை 6 மணிக்குத் தொடங்கினுல் மறுநாள் விடியும் வரையும் ஒரே குளறலாகவே செய்கின்றனர். பூசை நடந்தாலென்ன அபிஷேகம் நடந்தாலென்ன எல்லா நேரமும் ஒரே குளறல்' யாரும் அதைக் கட்டுப்படுத்த முடியாது! அடுத்து தம்பி இதை நிற்பாட்டு என்று சொல்ல முடியாது! சொன்னுலும் நிற்பாட்டப்படாது! பெரும்பாலும் இவரிடம் இதைச் செய்யாதீர் என்று சொல்ல எல்லார்க்கும் பயம்; ஏன் என்ருல் இதை நடத்துபவர் இதை விரும்புபவர் எல்லாருமே நன்நெறி உணராதவர் ஆதலால் இவர் எது செய்தாலும் அதைத் தட்டிக் கேட்க ஆள் இல்லை. இவர் வழி பிழை என்று அரசாங்கத்தில் முறையிட்டாலும் அரசாங்கமே அதைப்பற்றி அக்கறை இல்லை,

சமீப நாட்களில் நமது கோவில்களில் நடைபெற்ற பொப்பிசைப் பாடல்களை நாம் காதால் கேட்க முடியாதனவாக இருந்தது:

மாமி மாமி கோழி இறைச்சி: சுருங்கனிக்கமாலு; தலையணையில் கைவத்து சல்லாப நடனம்; மச்சான் கண் அடிச்சான் அதை விட வில் இசை அது வேடிக்கை தேலிக்கை பிரசங்கம் என்ருல் சரித்திரத்தை விடுத்து வேறே பேசுகிருர்கள், இதை யாரிடம் சொல்வது, ஊர் மக்களுக்கு அமைதியும் நற்பண்பும் பக்திமையும் வளர்க்க வேண்டிய கோயில்கள் இதைச் செய்தால் நாம் என் செய்யலாம், நல்லவர்கள் ஏழைகள் சாதுரோதனர்கள் சிந்தும் கண்ணீரே முருகன் கை வலே என்பதை சிந்தித்தால் நன்று.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கோயில் வழிபடுவார்க்கேஉரியது. வீணருக் கும் வியாபாரிக்கும் அதுஇடமன்று.

மேற்கூறிய கட்டுரையை நாம் நன்கு தெளிந்து கொண்டு நமது சைவமக்கள் இன்று கோயிலில் நடைமுறைப்படுத்த வேண்டியவற்றைச் சிந்திப்போம். மதுவுண்டு கற்பழித்து பொய் கூறித் திரியும் பேதைப் பிராமணனதும் நெறியிலாத பிரசாரகரதும் ஆங்காரம் கொண்ட திருப்பணிச் சபையாரதும் கையில் கோயிலைச் சிக்குண்ணப் படவையாது கோவிலின் உண்மை நிலை யாது என்பது பற்றி நாம் ஒவ்வொருவரும் விளங்கிட உண்மை நிலையை இக்கட்டுரை மூலம் பொதுமக்கள் எல்லாரையும் பத்திரிகை ஆசிரியர் என்ற முறையில் தெளிவு படுத்தல் என் கடமை உண்மையை விளங்கி நீதியின் வழி நீங்கள் உறுதி கொள்ளுங்கள்.

கோயில் எதற்காக உண்டு? இறைவனை அங்கு எழுந்தருளப்பண்ணி அவர்க்கு வழிபாடு புரிந்து தொண்டு செய்து உய்தி அடைவதற்கே யாகும். உய்தி என்ருல் யாது 'காமம் குரோதம் கொலை களவு இவற்ருல் நாம் பீடிக்கப்பட்டு தறி கெட்டு நெறி கெட்டு அலைந்து முடிவில் கொடிய அந்தகாரமான இருளில் சிக்குண்டு தவியாதபடி நன்நிலைப்படலே உய்தி என்பதாகும்.

ஒருசெயலைச் செய்தால் மறுசெயல் அதற்குத் தொடர்கிறது. ஒருவரை நாம் அடித்தால் நாமும் அடிபடுவோம். ஒருவரைக் கொன்ருல் நாமும் கொலைப்படுவோம். ஓர் கன்னிப் பெண்ணைக் கற்பழித்தால் அதனுல் தோஷம் பெருகும். துயரம் பெருகும் துன்பமே வாழ்வில் சூழும். இத்துன்பத்தில் நின்றும் நீங்க இயலாது.

இன்று பலர் தம் வாழ்வில் பெரும் துயரங்களை அநுபவிக்கின்ருர். ஓயாத வறுமை பொருள் இன்மை எத்தொழில் செய்தாலும் விருத்தி இல்லை. தனது மனைவி தனக்குப் பணியாது பெரும் துன்பம் செய்கிருள். கணவன் மனைவியை படாத அத்தனைத் துயரமும் படும்படி செய்கிருர்.

இதேன் வருகிறது! ஐயோ எனக்கா இத்துயரம். கண்கெட்ட கடவுளே நீயும் இதைப்பார்த்திருப்பாயோ! என்றெல்லாம் மனம் நோகின்ருேம்.

இப்படியாகப் பெருகும் துயரத்திற்கு எம்பிரான் திருஞானசம்பந்தர் ஒரு காரணம் சொல்கின்ருர். அவ்வினைக் இந்த வினை என்பதை நீவிர் அறிவீர்! ஆதலால் இனியாதல் உய்யும் செயலை நாடாதிருப்பது உமக்கு பழுது அல்லவோ! நாமோ எனில் கையால் திருத்தொண்டு செய்து எம்பெருமான் திருவடிகளைப் போற்றுவோம். நாங்கள் அடியவர் இனி முன் செய்த தீவினை வந்து எம்மைத் துன்புறுத்தாது. ஏனெனில் எம் பெருமானது திருநீல கண்டம் உண்டே எனச் சொல்கின்ருர்.

இதை எப்பொழுது சொல்லி நம்மை உணரவைக்கிருர் எம்பெருமான் ஞானசம்பந்தர் என்ருல்; செங்குன்றூர் என்னும தலத்திற்கு செல்கின்ருர்: சென்ற போது அங்கு கடுங்குளிர் எக்காலமும் இல்லாத படி வந்தது. அதனுல் நோய் பெருகியது. எல்லா மக்களும் நோய் வாய்ப்படுகின்றனர். இதனை சுவாமிகளுடன் சென்ற பரிசனரும் அடியாரும் உணர்கின்றனர். உடனுக அவர்கள் அச்சம் கொள்கின்றனர். இந்த நோய் பரவி எம்மையும் படுக்கவைத்தால் என் செய்வது? அந்த ஒரு அச்சத்தால் திருஞானசம்பந்தப் பெருமானிடம் சென்று அவரை வணங்கி தொற்று நோய் பரவி வரலால் அவ்வூரை விட்டு அப்பால் போவதே நன்ருகும் எனத் தெரிவிக்கின்றனர்.

அப்போது திருஞானசம்பந்த சுவாமிகள் அவரை நோக்கி இதென்ன நீர் சொல்வது. நாம் எம்பெருமான் அருள் உணராது அடுத்த தலம் நோக்கோம்: அஃதிருப்ப இந்த நோய் இங்கு வர வேண்டிய காரணம் உணருங்கள்! அது தான் இவ்வூர் மக்கள் முன் முன் செய்த கொடு வினைகள் இன்று இவர்க்கு இந்நோயாக வருகிறது. இந்த நோயை வராது தடுக்க வல்ல புண்ணியம் இவரிடம் இல்லை. இதை நீங்கள் உணரவேண்டுமே! எல்லீரும் அறிவீரே! ஒவ்வொருவரும் செய்யும் கொடுந் தொழிலை நீக்கி நன்மை அடைய இது கண்டாதல் நினையுங்கள். முன் செய்த பாதகங்கள் அனைத்துமே இப்பிறவியில் துயரம் என்பதை நீவிர் உணர்ந்தால் இனியும் இப்படித் துயருருவகை நல் நிலைப்படஉம் சித்தத்து ஓர் மாற்றத்தை ஏற்படுத்துங்கள். அப்படியாக ஒரு மாற்றம் செய்யாதிருப்பது உங்களுக்குப் பழுது! அறிவுடையீர் இதனை விளங்கும் எனச் சொல்லியே அவ்வினைக் கிவ்வினை எனத் தொடங்கும் முன் சொல்லிய திருப்பதிகம் பாடியருள்கின்ருர். அந்த திருப்பதிகத்து மனிதரை நல் நிலைப்படுத்தற்கு முதற் கண் தீவினையின் செயலை நிறுத்தச் சொல்லி பின்னர் தொண்டு மூலம் முன்புள்ள தீவினையால் வரும் துயர் நீக்கும் என மொழிகின்ருர். இந்தத் தொண்டுகள் யாது என எண்ணில் பூஞ்சோலை வளர்ப்போம்! குளம் பல தோண்டுவோம். கனிந்த மனமுடையராகி எம்பிரானைப் போற்றுவோம் பூவினைக் கொய்து திருவடி போற்றுவோம் நாங்கள் அடியவர் என நினைப்போம் என்கின்ருர்.

இதனை நன்கு உணர்ந்தால் கோயில் தொண்டு செய்வார்க்கே உரியது. ஏனையோர்க்கு அங்கு இடமில்லை. இதனைத் திருக்கேதீச்சரப் பதிகம் ஒன்றில் எம்பிரான் சுந்தரர் அங்கம் மறை அன்னூர் அவர் அடியார் தொழுது ஏத்த திருக்கேதீச்சரத்து இருந்தான் எங்கடவுள் என்கின்ருர்.

அடியார்களைப் பற்றிச் சொல்லும் போது வேதங்களை ஓத்தவர் அவர் என்றதை அங்கம் மறை அன்னூர் என்கின்ருர். அடியார்கள் வேதங்களை ஓத்திருப்பார் என்ற போது வேத நெறி தவருது வாழ்பவர் என்றதாகும். இதை இன்று திருக்கேதீச்சரத் திருப்பணிச்சபையார் உணர்வாரோ. குளிக்கப் போய்ச் சேறு பூசுற நிலையில் திருப்பணிச் சபை சிந்தனையின்றி நடக்குது. நாம் என் செய்யலாம். நமது சொல்லை ஏற்று உணரும் புண்ணிய நிலை அவரிடத்து இல்லை என்றே நினைந்து கொள்வதன்றி வேறில்லை.

திருக்கேதீச்சரத்து வணங்கும் அடியார் நிலை பற்றி சம்பந்தப்பெருமான் கூறுமிடத்து அல்லல் ஆசு அறுத்து அடியிணை தொழுது எழும் அன்பராம் அடியார் எனவே கூறியருளி மீண்டும் தொண்டர் நாள் தோறும் துதிசெய அருள் செய் கேதீச்சரம் அன்பொடும் இறைஞ்சும் கேதீச்சரம் என்றெல்லாம் சொல்லலால் கோயில் கும்பிடுதற்குரிய இடமேயன்றி பிரசாரம் முதலியனவும் பணம் சேகரிக்கும் இடமன்று!

இதனுலே தான் கோவில் தொழுவார்க்குரியது. அவருடைய தொழுகையை தியானத்தை பங்கப்படுத்தும் வகை ஒலிபெருக்கி முதலியன பாவியாதீர். தொழுவார் மனம் நோகுமாறு ஏதுமே செய்யாதீர் என்று நாம் சொல்ல வேண்டி வந்தது.

தொழுகின்ற இடம் எவ்வளவு தூய்மை உடையதாக இருக்கவேண்டும் மக்களே நினையுங்கள். தொழுகின்ற இடத்தில் தொல்லைகள் வருவிக்கலாமா கும்பிடச் செல்வாரிடம் நாம் பொருளும் கேட்கலாமா? அவர் மனதை குழப்பும் வகை ஒலிபெருக்கியில் [illegible] செய்யலாமா? வியாபாரிகளை வீதியில் வைத்திருக்கலாமா?

அடுத்து இங்கு வியாபாரிகள் என நாம் குறிப்பிடுவது பிரசாரகரையும் சில எஜமானரையும் சில பிராமணரையுமே ஆகும்: ஏன் எனில் இன்று இவர்கள் கும்பிடச் செல்வாரின் பத்திமையை தமக்கு வருவாய் தேடிடும் பொருளாக மாற்றுகின்றனர். இதனுலே தான் ரிக்கற் முதலியன வரவேண்டி வந்தது. சங்கக்கடையில் வாங்கும் பொருளுக்கு சிட்டை போடுவது போல் இன்று வழிபாடும் எல்லாக் கோவிலிலும் வியாபாரச் சிட்டையாக மாற்றப் பெறுகிறது.

பலரும் கேட்கலாம் அப்படியாயின் எல்லாரையும் சும்மா வந்து கும்பிட்டு அருச்சித்துப் போங்கள் என்ருல் கோவிலின் பூசை நடைபெறற்கு பணம் யாரிடம் பெறுவது.

அதற்குத்தான் ஆகமம் கோவிலைக் கட்டி முடித்தால் கோவிலின் பரிபாலனத்திற்கு வேண்டிய பணத்தை பொருளை பெறும் வகையையும் சிந்தித்தே கோவிலை அமையுங்கள் எனச் சொல்கின்றது. இதன் படியாக அக்கோயிலின் பரிபாலனத்திற்காக வேண்டி காணிகள் கோயிலினிற்கு பல பெரியோர் வழங்கி உள்ளனர். வண்ணுர்பண்ணை வைத்தீஸ்வரப் பெருமான் ஆலயம் இதற்கு தக்க சான்று பகருகின்றது.

அடுத்து கோவிலை பரிபாலிக்கும் சபையையோ எஜமானையோ தர்மகர்த்தா என மொழியப்படுவது. தர்மகர்த்தா என்பதன் அர்த்தம் கோவில் ஓர் தருமம் அத்தருமத்தை பரிபாலிப்பவர் இவர் என்றதால் கர்த்தா எனச் சொல்லப்பெறுவது. அதனுலே தர்மத்திற்கு உரிய கர்த்தா வியாபாரியாக மாறின் அது அதர்மமே?

கலிகாலத்தில் மனிதன் தீமையைத் துணிந்து செய்வான். தருமம் செய்ய புண்ணியம் செய்திட மனம் கோணுவான். இது இப்படியான நிலையான படியால் சம்பந்தப் பெருமானும் கற்று ஆங்கு எரி ஓம்பி கலியை வாராமே செற்ருர் வாழும் தில்லைச் சிற்றம்பலம் என்கிருர். கலி தனது வேகத்தைக் காட்டாது அடக்குவது அந்தணர் ஒழுக்கம். இதை யாருக்குச் சொல்வது யார் கேட்பது. யாருமஅந்தணரின் அறம் விளங்கினுர் இருந்தால் தானே.

எனவே கோயிலில் கலி பெருக்கும் செயல் அதாவது வியாபார முறையாக வழிபட வருவாரிடம் பணம் வேண்டும் செயல் அத்தனையும் நீக்கவேண்டும். வழிபடுவாரைச் சட்டமூலம் வழிபடுவதற்கு பொருள் கொடு எனச் சொல்லல் தகாது. அது அக்கோவிலின் தர்மத்திற்கு பெரும் துரோகமாவது.

அடுத்து கோவிலை பாதுகாத்து தொண்டு செய்வார் யாவரும் அடியவர்கள். இவர்கள் யாவரும் செய்யும் பணிகட்கு அவரவர்க்கு தக்க பொருளை மக்களே கொடுங்கள் என்கின்ருர் திருநாவுக்கரசர். அவர்கள் நன்னிலையுடன் வாழ மக்கள் பொருள் உதவல் வேண்டும். கும்பிடச் செல்வார்க்கு ஏதும் ஒரு வசதியீனத்தை நிர்வாகம் எக்காரணம் கொண்டும் ஏற்படுத்தக் கூடாது.

வழிபாடு தான கோவிலில் முக்கியம் இறைவனுக்குச் செய்யும் பூசையும் தான் முக்கியம் இவ்வளவும் ஒரு கோவிலில் நடந்தால் நன்று. இதில் ஏதும் முட்டு ஏற்படக் கூடாது. இன்று திருவிழா என்றது இறைவனுக்கு இலாது மக்களுக்காகவே நடைபெறுகின்றது. திருவிழா பெரும்பாலும் மக்கள் கண்டு மகிழ கேட்டு மகிழ கேட்டுச் சிரிக்க நடைபெறுகின்றதே ஒழிய வேறு எதற்காகவும் நடைபெறுவதில்லை. மக்கள் கண்டு மகிழ சுவாமிக்கு லயிற் அடிக்கிருர் என்ருல் நாம் இதற்கு மேல் வீணரின் வீம்புச் செயலை என்சொல்வது.

சுவாமியின் திரு உலாவை அவசரம் அவசரமாக முடித்து கொண்டோடி வந்து ஓரிடத்தில் வைத்துவிட்டு பிறகு வில்லுப்பாட்டு பிரசங்கம் பாராட்டு பட்டமளிப்பு எல்லாம் செய்கிருர். எதற்காக இது யாவும் இறைவனுக்கா? இந்த நிகழ்ச்சிகள் யாவும் நடைபெறும்போது யாரேனும் சுவாமி கும்பிட வந்தவரா? ஆகையால் இவையாவும் மக்கள் மதிப்புப் பெறச் செய்தனவே அன்றி வேறு இறைவன் அருள் பெறச் செய்தன அன்று. இத்தகையதாக மக்கள் மகிழ திருவிழாச் செய்வார் யாவரும் வீணரே. கோவில் பேரில் பொருள் ஈட்டும் தர்மகர்த்தாக்கள் யாவரும் வியாபாரிகளே. கோவில் எல்லார்க்கும் பொதுவான இடம். கோவில் வழிபாட்டிற்குரிய இடம். வியாபாரிகட்கும் வீணருக்கும் உரிய இடமன்று? நிறுத்துங்கள் உங்களது வீண்செயலையும் வெருளித்தனத்தையும்.

## வில்லிசைக் கோமாளி ஐயர் விளானில் பட்டபாடு

தேவி வில்லிசைக்குழ ஒன்றின் கோமாளியாக நாயன்மார்கட்டைச் சேர்ந்த பிராமணர் ஒருவர் விளான் பிள்ளையார் கோவிலிற்கு வில் இசைக்குச் சென்றிருந்தார். அன்றைய விழாவில் முன்னர் மேளக்கச்சேரி நடைபெற்றது. இனிமையாகவும் பத்திமையாகவும் நாதஸ்வரம் வாசிக்கப் பெற்றதாம். அந்நேரம் நாதஸ்வரத்தில் நாகவராளி ராகம் ஊதத் தொடங்கஞராம் கேட்போர் பரவசமடையும் படி நன்ருக இராகத்தை ஊதி வரும் போது அங்கிருந்த கன்னிப் பெண்ணிற்கு உருவந்து கலையாடத் தொடங்கியதாம் வில்லிசைக்குச் சென்றிருந்த கோமாளி ஐயர் தாங்கள் மந்திரவாதியின் புதல்வர் என்று காட்டவோ என்னவோ தெரியாது விறுக்கென எழுந்து சென்று கலை அடங்க கன்னிப் பெண் மீது திருநீறு போட்டாராம். அப்பெண் வீறு கொண்டு "எடேய் பிராமணு நீ திருநீறு போட்டு என்னை அடக்குவாயோ, என்றதாம். இந்த நிலையில் அப்பெண்ணின் தங்கை கூட இருந்தவள் போடா அங்காலை என்று ஐயரைப் பேசினுளாம். இத்துடன் ஐயர் மங்கி தன் செயலை விட்டு வந்து இருந்தாராம். கன்னிப் பெண்கட்கு திருநீறு போடும் ஐயர்மாரின் நோக்கம் கலை வரும் பெண்ணுக்கு விளங்காது போமோ? இச்செய்தியை விளானில் உள்ள அன்பர்இதனை நேரில் கண்டவர் அன்று வில்லிசைக் கோமாளி ஐயர் பட்டபாட்டை விமரிசையான சிரிப்பொலியுடன் கூறினுர்.

## ஒலிபெருக்கி வியாபாரத்தின் உச்சம்.

கோவிலில் ஒலி பெருக்கியை பாவிக்கும் பிராமணர் முகாமையாளர்கள் அதனை ஓர் வியாபாரமாகவே ஆக்குகின்றனர். பெரும் பாலும் இது எல்லாம் திருவிழாக் காலத்து குத்தகை கொம்மிசனுடன் பிடிப்பது. அதனுலே சில திருவிழாக்காறர் தமக்கு ஒலிபெருக்கி வேண்டாம் என்ருல் முகாமையாளர் வை ஒலிபெருக்கிக் காசு என வற்புறுத்தி வேண்டுகின்றனர். ஏதும் மறுத்துச் சொன்னுல் விடு திருவிழாவை என்கின்றனர். இப்படி பயமுறுத்தல் சண்டித்தன மூலம் கோவிலில் ஒலிபெருக்கி பாவிக்கப்படுகிறது.

இப்படியாக காரநகர் கருங்காலி போகட்டி சுப்பிரமணிய சுவாமி கோவிலில் ஒலிபெருக்கி தம் திருவிழாவில் வேண்டாமென்ற அன்பரை வற்புறுத்தி தகாத முறையில் பாவிக்கப் பண்ணி பணம் பெற்றனராம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org